Follow us:


# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 01, இதழ் : 55 சார்வரி வருடம், ஆவணி மாதம் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை (04.09.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 15, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

## 20ஆவது திருத்தம்: வெளியாகியது வர்த்தமானி





அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 20ஆம் திருத்தச் சட்டமூல வரைவிற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ள நிலையில், புதிய அரசியலமைப்பை.. 02

## நக்கல்நமசிவாயம்

முட்டை விக்கிற விலைக்கு இனி ஸ்கூலில கணக்குப் பாடத்தில முட்டை வாங்குற பிள்ளையள எப்படி ஏச மனம் வரும் பாருங்கோ..





# இருபதுக்கெதிராக நீதிமன்றில் வழக்கு!

## தாக்கல் செய்ய பல தரப்புகள் முஸ்தீபு; அரசுக்கு சத்தியசோதனை ஆரம்பம்

● நமது நிருபர்

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் ஜனநாயக விரோதமானதென தெரிவித்து அதனை மேற்கொள்ளவிருக்கும் அரசின் முயற்சிக்கெதிராக நீதிமன்றம் செல்ல பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட்ட அரசியல் கட்சிகள் பலவும், அரச சார்பற்ற அமைப்புகள் பலவும் தயாராகி வருகின்றன.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் வர்த்தமானியில் நேற்று வெளியான நிலையில் இரண்டு வாரங்களுக்குள் அது நாடாளுமன்றத்தில் அரசால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சுயாதீன ஆணைக்குழுக்களின் எதிர்காலம் தொடர்பில்.... 02



கப்பித்தாவத்தை, ஸ்ரீகைலாசநாதர் கோவில் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றபோது பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுக்கும் காட்சி..

படப்பிடிப்பு : லலித் பெரேரா

## அம்பாறை கடற்பரப்பில் பற்றியெரிந்த சர்வதேச எண்ணெய்க் கப்பல்!



எரிபொருளை ஏற்றிச் சென்ற கப்பலொன்றில், அம்பாறை சங்கமன்கந்தைலிருந்து 38 கடல் மைல் தொலைவில் தீ விபத்து ஏற்பட்டது.

எம்டி நியூ டயமண்ட் என்ற அந்த கப்பலின் பணியாளர்களை மீட்க கடற்படை உடனடி நடவடிக்கைகளை எடுத்ததாக கடற்படை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த கப்பல் பனாமாவைச் சேர்ந்தது. இந்தியா செல்லும் வழியில் விபத்தை சந்தித்துள்ளது. திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்து இரண்டு கப்பல்களும், ஹம்பாந்தோட்டை கடற்படைத் தளத்திலிருந்து ஒரு கப்பலும் மேற்படி கப்பலின் பணியாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டன. கப்பலை கண்காணிக்க இலங்கை விமானப்படையின் பி -200 பீச் கிராஃப்ட் விமானம் அனுப்பப்பட்டது.

## ‘ஹெப்பி பேர்த்டே மைத்ரி’ சிறிசேனவை வாழ்த்திய மஹிந்த!



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு நேற்று 69ஆவது பிறந்த நாள். வழமையாக எல்லா அரசியல் பிரமுகர்களுக்கும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நேற்று முன்னாள் ஜனாதிபதி மைத்ரிக்கும் வாழ்த்தினை தெரிவித்தார்.

சில நிகழ்வுகள் நடக்கும்போது வாழ்க்கை ஒரு வட்டம் அல்லது உலகம் உருண்டை என்று பேச்சுவழக்கில் சொல்வதுண்டு. மைத்ரி ஜனாதிபதியாக இருந்த... 02



## மதவாதத்தை பரப்பும் 9 இஸ்லாமிய அமைப்புகள் நாட்டில் இயங்குவதாக மௌலவி தகவல்!

### ஈஸ்டர் தின தாக்குதல் விசாரணை ஆணைக்குழுவில் சாட்சியம்

இஸ்லாமிய மதவாதத்தை பரப்பும் வகையிலான 9 அமைப்புகள் நாட்டிற்குள் செயற்பட்டு வருவதாகவும், அவற்றில் இரண்டு அமைப்புகள் மாத்திரமே தடை செய்யப்பட்டுள்ளதாகவும் இஸ்லாமிய மௌலவியொருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத், சிலோன் தௌஹீத் ஜமாத் உள்ளிட்ட 7 இஸ்லாமிய அமைப்புகள் இன்றும் மதவாதத்தை எந்தவித தடங்கலும் இன்றி பரப்பி வருவதாக மேற்படி மௌலவி நேற்று முன்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் மதம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை சரியான முறையில்... 02

## கொரோனா சூழ்நிலையிலும் செக்ஸில் ஆர்வம் குறையாத இலங்கையர்!

### கூகுளில் அதிகளவு தேடுதல் நடத்திய நாடாக பதிவு




2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், கூகுளில் ‘செக்ஸ்’ என்ற வார்த்தையை அதிகம் தேடிய 10 நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தை பிடித்தது. முதலிடத்தில் எத்தியோப்பியா உள்ளது.

எத்தியோப்பியாவைத் தொடர்ந்து இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, வியட்நாம், பாகிஸ்தான், மியன்மார், சாம்பியா மற்றும் உருகுவே ஆகியவை உள்ளன. கூகுளின் ஆண்டு அறிக்கையின்படி, 2019 இல் ‘செக்ஸ்’ என்ற சொல்லைத் தேடிய 02

## காலி-களுத்துறை மாவட்டங்களுக்கு தொடர்ந்தும் மண்சரிவு எச்சரிக்கை!

● நா. தினுஷா

காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு தொடர்ச்சியான மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காலி மாவட்டத்தின் நியாகம, நாகொட, எல்பிட்டிய மற்றும் பத்தேகம பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் தொடரும் மழையுடனான காலநிலையின் காரணமாக, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அந்த பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, பாலிந்தநுவர, தொடங்கொட, அகலவத்த, மத்துகம, புளத்சிங்கள மற்றும் வலல்லவிட்ட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களில் மழைவீழ்ச்சி 75 மில்லிமீட்டரை மேவியுள்ளதால்,... 02

## 13ஆவது திருத்தம் குறித்து ஒரு வார்த்தையேனும் அமைச்சரவையில் பேசப்படவில்லை

அமைச்சர் கம்மன்பில



13 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒரு வார்த்தைதானும் பேசப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சரவையில் விடயமொன்றில் தீர்மானம் மேற்கொள்வதற்கு நீண்ட நாள் செல்லக்கூடும், ஆனால் 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து.... 02

## 13ஆவது திருத்தம் எம்மீது திணிக்கப்பட்டது மாகாணசபை முறைமையை எதிர்க்கிறேன்!

சரத் வீரசேகர மீண்டும் சாடல்

மாகாணசபை முறைமையை தற்போதும் எதிர்ப்பதாக அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

‘ஆரம்பத்திலிருந்தே மாகாணசபை முறைமையை நான் எதிர்த்து வந்துள்ளேன், அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னரும் எனது எதிர்ப்பு மாறவில்லை’ என அவர் குறிப்பிட்டுள்ளார். மாகாணசபை முறைமை தொடரவேண்டுமா என்பதை தீர்மானிப்பதே தனது முக்கிய பணி என அவர் தெரிவித்துள்ளார். 02



# சிலருக்கு சரியானதை செய்யப் பயம் இவர்கள் பிழையானதையும் செய்வர்

## 19ஆவது திருத்த அகற்றம் நாட்டுக்கு கேட்டைத் தரும் - யாழில் தெரிவித்தார் சுமந்திரன் -

மைத்ரி - ரணில் ஆட்சியில் 19ஆவது திருத்தத்தை உருவாக்க 4,5 மாதங்கள் சென்றன. இன்று 20ஆவது திருத்தத்தை 4,5 வாரத்திற்குள் உருவாக்குகிறார்கள். சிலருக்கு சரியானதை செய்ய பயம். இவர்களுக்கு பிழையானதை செய்யவும் பயமில்லையென தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

யாழ்ப்பாணம், மாலை சந்தையில் தனது அலுவலகத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோது இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கு முன்பாக பாரிய சவால் உள்ளது. எந்த மோசமான ஆட்சியாளர்களை வீழ்த்தினோமென மார்தட்டினோமோ, அவர்கள் அதைவிட மோசமான... 02



| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| கோட்டிபதி கப்ருக | 615 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 23ஆம் திகதி | C | 29 57 68 72 |
| அத கோட்டிபதி | 1020 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | Z | 38 58 66 76 |
| சனிதா வாசனா | 3355 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 24ஆம் திகதி | S | 02 06 29 71 |
| சுப்பர் போல் | 1198 ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 24ஆம் திகதி | O | 07 16 21 73 |
| அத கோட்டிபதி | 1021 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | O | 01 26 34 40 |
| கோட்டிபதி கப்ருக | 616 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 25ஆம் திகதி | D | 38 60 63 79 |
| அத கோட்டிபதி | 1027 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 31ஆம் திகதி | U | 10 40 50 56 |
| சனிதா வாசனா | 3358ஆவது வாரம் | 2020 ஓகஸ்ட் 31ஆம் திகதி | Z | 10 17 36 63 |
| சுப்பர் போல் | 1202 ஆவது வாரம் | 2020 ஆகஸ்ட் 31ஆம் திகதி | L | 01 17 22 52 |
| கோட்டிபதி கப்ருக | 619 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 01ஆம் திகதி | Y | 12 16 56 16 |
| அத கோட்டிபதி | 1028 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 01ஆம் திகதி | Y | 22 26 42 63 |
| சுப்பர் போல் | 1203 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | W | 13 43 44 64 |
| அத கோட்டிபதி | 1029 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | R | 02 14 35 37 |
| சனிதா வாசனா | 3359 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | A | 10 60 71 74 |



சுகாதார திணைக்களத்தின் சிரேஷ்ட டெங்கு ஒழிப்பு பதவியை உடனடியாக நிரந்தர நியமனமாக்குமாறு கோரி அகில இலங்கை டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் சங்கத்தினர் நேற்று கொழும்பு கோட்டையிலிருந்து நடைப்பயணமாக கொழும்பு ஆர்ப்பாட்ட இடத்துக்கு சென்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது.... [படப்பிடிப்பு : எஷான் தஸநாயக்க]





கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீகைலாசநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழா உற்சவத்தின்போது... [படப்பிடிப்பு -லலித் பெரேரா]

## இருபதுக்கெதிராக...

கேள்வியெழுந்துள்ளதாலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் கூடுதலாக செல்வதாலும், அவை ஜனநாயக விரோதமான செயற்பாடுகளென தெரிவித்தே மேற்படி தரப்புகள் நீதிமன்றம் செல்லவுள்ளன.

நாடாளுமன்றத்தில் அரசியலமைப்பு வரைவு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதற்கெதிராக எவரும் நீதிமன்றம் சென்றால் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை அதனை சபையில் விவாதிக்க முடியாது.

அதேசமயம், நாடாளுமன்றத்திற்கும் நீதித்துறைக்கும், நிறைவேற்றதிகாரத்திற்குமிடையில் அதிகாரம் சம்பந்தமான விடயம் வருவதால் ஆட்சியாளர்களுக்கு இது சத்தியசோதனைக் காலமென அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## 20ஆவது திருத்தம்...

உருவாக்குவதற்கான நிபுணர் குழுவும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து நேற்றுக் காலை 20ஆம் திருத்தச் சட்டமூல வரைபாயானது அரச அச்சக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு நேற்றுமாலை வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## காலி...

அந்த பிரதேசங்களில் மழையுடனான காலநிலை தொடருமாக இருந்தால் மண்சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களை முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## மதவாதத்தை...

கட்டியெழுப்ப வேண்டும் என்றால், இஸ்லாமிய மதத்தை சரியான முறையில் கடைபிடிப்பதாக கூறி, நாட்டில் தற்போது இயங்கி வரும் ஜம்மியத்துல் உலமா சபை உள்ளிட்ட அனைத்து இஸ்லாமிய மத நிறுவனங்களும் தடை செய்யப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஈஸ்டர் தின தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கியபோதே மௌலவி இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, 1971ஆம் ஆண்டுக்கு பின்னர் உலமாக்கள் சபையை, வஹாப்வாதத்தை கடைப்பிடிப்போர் கைப்பற்றியுள்ளனர்.

அதன்பின்னர், இலங்கையில் இஸ்லாமிய மக்களில் 99 வீதமானோர் வஹாப்வாதத்தை கடைபிடிக்கின்றமையே சரியான இஸ்லாமிய தர்மம் என ஏற்றுக்கொண்டுள்ளனர். வஹாப் வாதத்தை இலங்கையில் பரப்புவதற்காக சவூதி அரேபியா, குவைட் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் பாரிய நிதியுதவிகளை வழங்கி வருகின்றன. வஹாப் வாதத்திற்கு எதிராக கருத்து வெளியிட்டமையை அடுத்து, மக்காவில் வைத்து 1991ஆம் ஆண்டு பலரின் வாய்கள் வெட்டப்பட்டன. அதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாக்குதல்கள் கூட நடத்தப்பட்டுள்ளன. இலங்கையில் வஹாப்வாதத்தை தடை செய்யாதுவிடும் பட்சத்தில், நாட்டில் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான சந்தர்ப்பம் தொடர்ந்தும் காணப்படுகிறது. இலங்கையிலுள்ள அனைத்து மதங்களும் இன்று புனித தன்மையுடன் கிடையாது. அனைத்து மதங்களிலும் அரசியல் கலந்துள்ளது.

அத்துடன், சட்டம் மற்றும் உண்மை ஆகியன நிதி மற்றும் அரசியல் அதிகாரங்களுக்கு கட்டுப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளார் அந்த மௌலவி.

(பாதுகாப்பு காரணங்களினால் பெயரை வெளியிட வேண்டாம் என மேற்படி மௌலவி கூறிய நிலையில், ஆணைக்குழு விடுத்த வேண்டுக்கோளுக்கு இணங்க அவரின் பெயர் வெளியிடப்படவில்லை)

## ஹெப்பி...

காலங்களில் மஹிந்தவின் பிறந்த நாளுக்கு வாழ்த்து தெரிவித்ததில்லை. ஆனால், மஹிந்தவோ தனது பழக்கத்தின்படி தொடர்ந்து வாழ்த்தை தெரிவிப்பது வழக்கம். கடந்த பிறந்த நாளில் மைத்ரி ஜனாதிபதி பதவியில் இருந்தார். அவரை வாழ்த்துவதற்கு மஹிந்த முயன்றபோது அவர் அழைப்புக்கு பதிலளிக்க முன்வரவில்லை.

ஆனால், ஒரு வருடம் கழிந்து மைத்ரிக்கு பதவி எதுவும் இல்லாத நிலையில் அவருக்கு வாழ்த்தினை தெரிவித்திருக்கிறார் மஹிந்த.

இந்த விடயம் நேற்றைய தினம் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது இப்படித்தான்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜரானார் பிள்ளையான்



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப் பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினரான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்று முன்னிலையாகியிருந்தார். தொடர்ச்சியாக அவரிடம் 5 மணிநேர விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாக்குமூலம் பதிவு செய்வதற்காக ஆணைக்குழுவினால், விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய அவர், அங்கு முன்னிலையாகியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கடந்த 2015 ஒக்டோபர் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் சிறையிலுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பதற்காக அவர் நேற்று மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து விசேட அதிரடிப்படையினரின் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா....

நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்தில் இருந்தது. 2012 முதல் 2016 வரை தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகளாக 'செக்ஸ்' என்ற வார்த்தையைத் தேடிய கூகுள் தேடல்களில் இலங்கை முதலிடத்தில் இருந்தது.

கூகுளின் வருடாந்த அறிக்கையின்படி, மேல் மாகாணத்தில் கொழும்பு, நுகேகொட மற்றும் ஹோமாகம ஆகியவை 2012 ஆம் ஆண்டில் 'செக்ஸ்' என்ற வார்த்தையை அதிகம் தேடிய நகரங்களாகும், 2020 ஆம் ஆண்டில் வட மத்திய மாகாணம் முதலிடத்தில் உள்ளது.

வட மத்திய மாகாணத்தில் முதலிடத்தில் கட்டுவன்வில, கல்கடவெல, ராஜங்கனய, புல்முட மற்றும் புனேவ நகரங்கள் உள்ளன.

ஊவா, வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ, மேல், வடமேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில், சியம்பலாண்டுவ, தெரவில், மஹோயா, ஹோமாகம, இஹலபுளியங்குளம், வாருகந்தெனிய, மற்றும் ஹரஸ்பெத்த நகரங்கள் மற்றும் பிரதேசங்கள் கூகுள் தேடுபொறியில் 'செக்ஸ்' என்ற வார்த்தையை அதிகம் தேடிய பகுதிகளாகும்.

## சிலருக்கு...

விதத்தில், அதிக பலத்துடன் ஆட்சிக்கு வந்துள்ளனர்.

இவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஒரே தேர்தலில் பெற்றுள்ளனர். யுத்த வெற்றிக்கு பின்னர் வந்த 2010 தேர்தலில் கூட, மூன்றில் இரண்டை பெறவில்லை. பின்னர் பணம் கொடுத்து பெற்றனர். எங்களது பலம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது புதிய அரசியலமைப்பை உருவாக்க அரசு முயற்சிக்கிறது. அதற்கு முன்னதாக 19ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்து, 20ஆவது திருத்தத்தை கொண்டு வர முயற்சிக்கிறார்கள். மிக விரைவாக அதை செய்கிறார்கள். சட்டமா அதிபருக்கு வரைபை சென்ற வாரமே அனுப்பிவிட்டனர். சட்டமா அதிபர், சர்வஜன வாக்கெடுப்பின்றி நிறைவேற்றக்கூடியது என தனது கருத்தை சொல்லியுள்ளார்.

அவர்களது வேகத்தை பாருங்கள்.2015ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, 19ஆவது திருத்தத்தை கொண்டுவர 4 அல்லது 5 மாதங்களுக்கு மேல் சென்றது. அது 18ஆவது திருத்தத்தை அகற்றி, 17ஆவது திருத்தத்தை கொண்டு வருவதுதான். ஆனால் 4,5 மாதங்கள் எடுத்தது. இவர்களுக்கு 4 அல்லது 5 வாரங்கள் கூட தேவையில்லை.

சிலருக்கு சரியானதை செய்வதற்கு பயம். இவர்களுக்கோ பிழையானதை செய்யவும் பயமே கிடையாது. அப்படியான அரசாங்கத்தையே எதிர்கொள்கிறோம். 19ஆவது திருத்தத்தை அகற்றுவது, நாட்டை மோசமான ஜனநாயக விரோத பாதையிலே கொண்டு செல்லும் வழி. இதை நாங்கள் திரும்பத் திரும்ப அரசாங்கத்திற்கு சொல்லுகிறோம்.

ஜனநாயகத்தை மேம்படுத்த, இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக, நல்லாட்சி தத்துவங்களை உள்ளடக்கியதாக அரைவாசி தூரம் செல்வதற்கென கொண்டுவரப்பட்டது 19ஆவது திருத்தம். அது முழு தூரமும் சென்றிருந்தால் நாங்கள் இயற்றிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்திருக்கும். அதற்கு முன்னர் எல்லாம் கவிழ்ந்து கொட்டுப்பட்டு - இருக்கின்ற அந்த அரைவாசித்தூரம் சென்றதையும் இல்லாதொழிக்கும் பணியை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

இது நாட்டுக்கு கேடு. ஜனநாயக விரோத செயல். இதை நாங்கள் எதிர்ப்போம் என்பதை அரசுக்கு சொல்லி வைக்க விரும்புகிறோம். ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்ட எந்த அரசும் நிலைத்து நின்றதில்லை.

நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவையென்பதை ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது சொன்னார். அதற்கான 4 காரணங்களையும் சொன்னார். அதை நாம் வரவேற்றோம். புதிய அரசியலமைப்பு தேவையென்பது நாம் காலாகாலமாக சொல்லி வருவது. அதில் நீங்கள் சொன்ன 4 விடயங்களில், 3 விடயங்களை குறிவைத்தே கடந்த ஆட்சியில் அரசியலமைப்பு பணியை ஆரம்பித்ததை நினைவுபடுத்தினோம். சுதந்திரக்கட்சியும் அதை இணங்கியது. அனைத்து கட்சிகளும் இணங்கிய வரைபை நிறைவேற்றும்படியும், அதற்கு ஆதரவளிப்பதாகவும் சொன்னோம்.

தேர்தலின் பின்னர் ஜனாதிபதி உரையாற்றியபோது, முதலில் 19ஆவது திருத்தத்தை அமுல்ப்படுத்துவதாகவும், பின்னர் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதாகவும் சொன்னார்.

இந்த நாட்டுக்கு தேவையானது புதிய அரசியலமைப்பு. ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது வெறும் சட்டமல்ல. அந்த நாட்டு மக்கள் தமக்குள் செய்து கொள்ளும் உடன்பாடு. அதை சமூக ஒப்பந்தம் என்பார்கள். என்னவிதமாக நாம் வாழப் போகிறோம், எப்படியான ஆட்சிமுறை, என்னவிதமாக நாட்டில் வாழும் வித்தியாசமான மக்கள் ஒருவரோடு ஒருவர் இணங்கிச் செயற்பட போகிறார்கள்,

ஜனநாயக அமைப்புக்கள் எப்படி இயங்கப் போகின்றன என்பதையெல்லாம் வரையறுத்து கூறுவதுதான்- நாட்டு மக்கள் இதுதான் எமது சமூக ஒப்பந்தமென கூறுவதுதான் அரசியலமைப்பு.

இந்த நாடு எதிர்கொண்ட மிகப்பெரிய பிரச்சினை அப்படியான சமூக ஒப்பந்தம் இல்லாமை. அது பேரினவாத சிந்தனையினால், பெரும்பான்மை ஆட்சியினால், கூடுதலான மக்கள் ஒரு பக்கம் இருக்கின்ற காரணத்தினால் – அந்த வாக்கு பலத்தினால் தமக்கு தேவையான விதத்தில் அரசியலமைப்பை உருவாக்கியதால் வந்த பிரச்சினை.

எண்ணிக்கையில் சிறுபான்மையாக உள்ள ஒரே காரணத்தினால், தாம் இந்த நாட்டின் சம பிரஜைகள் என்பதை நிரூபிக்க முடியாமல் தமது இறைமையை விட்டுக்கொடுக்க வேண்டியதாக மற்றைய மக்கள் இருக்கும் துர்ப்பாக்கியமான நிலைமையின் காரணமாகவே இத்தனை இலட்சம் மக்கள் தமது உயிர்களை பலி கொடுத்தனர்.

பல தசாப்தங்களாக நாடு முழுவதும் போர்க்களமாக இருந்தது. அதை சரி செய்ய வேண்டுமென்றால், நாட்டுக்கு புதிய அரசியலமைப்பு தேவை.

அது ஒரு இனத்திற்கான அரசியலமைப்பாக இருக்க முடியாது. அனைத்து மக்களும் இணங்கும் சமூக ஒப்பந்தமாக அரசியலமைப்பு இருக்க வேண்டும். அதைத்தான் இந்த அரசு செய்ய வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாட்டில் வாழும் அனைத்து மக்களின் நன்மைக்காக உபயோகிக்க வேண்டிய ஒரு தார்மீக கடப்பாடு அரசுக்குள்ளது. அதை அவர்கள் செய்ய வேண்டுமென்ற சவாலை நாம் அரசின் முன் வைக்கிறோம்.

அந்த துணிவு அவர்களுக்கு வேண்டும். அதை செய்ய துணிவார்களாக இருந்தால் எமது ஆதரவு நிச்சயம் அந்த செயலுக்கு இருக்கும். தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் அதை செய்து முடித்தால், நாட்டிற்கு தேவையான சமூக ஒப்பந்தமாக அது மிளிரும்.

19ஆவது திருத்தத்தில் கைவைக்க வேண்டாமென கூட்டமைப்பின் தலைவர் நேற்று சொல்லியுள்ளார். புதிய அரசியலமைப்பை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்பார்கள்.

அனைவரது இணக்கத்துடனும் புதிய அரசியலமைப்பை உருவாக்கினால் நாடு சுபீட்சமான பாதையில் செல்லும். நாடு அந்த பாதையில் செல்லுமா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பு இன்றைய ஆட்சியாளர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. அதை செய்தால் நாடு சுபீட்சமடையும். இல்லையெனில் நாடு திரும்பவும் அதலபாதாளத்தில் தள்ளப்படும் என்றார்.

## 13ஆவது திருத்தம் எம்மீது..

13ஆவது திருத்தம் திணிக்கப்பட்டது என தெரிவித்துள்ள சரத் வீரசேகர அதன் ஊடாகவே மாகாணசபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டை சமஸ்டிமுறைக்கு மாற்றுவதே இதன் நோக்கம் எனினும் மாகாண ஆளுநர்கள் காரணமாக நாடு பாதுகாப்பாக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். ஆனால், ஆபத்து இன்னமும் உள்ளதால் அதனை அகற்றவேண்டும் எனவும் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மாகாண முதல்வராக பணியாற்றிய வேளை விக்னேஸ்வரன் வடமாகாணத்திலிருந்து புத்தரின் சிலைகளை அகற்றவேண்டும் என கோரி பேரணிகளில் ஈடுபட்டார் எனவும் குறிப்பிட்ட சரத்,

மாகாண முதல்வர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கினால் மாகாணங்கள் சுயாட்சியை அறிவிப்பதற்கான வாய்ப்புள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 13ஆவது திருத்தம் குறித்து...

அமைச்சரவையில் விரைவாக தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவை கூட்டத்தில் 13 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் குறித்து பேசப்பட்டதா? என்ற கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

20 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் அமைச்சரவையில் ஆராயப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் 3 வாரத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துடனே இது நிறைவேற்றப்படும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டுள்ளது.

இந்த திருத்தத்திற்கு எதிராக எவராவது நீதி மன்றம் சென்றால் மேலும் 3 வார காலம் செல்லும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். புதிய அரசியல் யாப்பு விரிவாக ஆராயப்படாமல் அதனை அரசாங்கம் ஒருபோதும் நிறைவேற்றாது. சகல தரப்பினரும் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். புதிய அரசியல் யாப்பு வகுப்பது ஒருவிடயம். இதற்கு பிரசித்திபெற்ற யாப்பு சட்டத்தரணி ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த குழுவே இதனை ஆராயும் என்று தெரிவித்த அமைச்சர் 20 ஆவது அரசியல் யாப்பு திருத்தம் குறித்து விளக்கமளிக்கையில் முன்னைய அரசாங்கமும் சர்வதேசமும் இது குறித்து திருப்தி கொண்டிருக்கவில்லை என்றார்.

நாட்டின் அதிகாரம் ஜனாதிபதியிடம் இருக்க வேண்டுமா? சபாநாயகரிடம் இருக்கவேண்டுமா? என்ற இழுபறி நிலை நிலவியது. இதனால் நாட்டை முன்னெடுக்க முடியாதிருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இந்த பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்காகவே அரசியல் யாப்பில் 20 ஆவது திருத்தத்தை மேற்கொண்டு நாட்டை முன்னெடுப்பதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20ஆவது அரசியல் அமைப்பு திருத்தம், 1978 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு திருத்தம் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக மக்கள் அரசாங்கத்திற்கு ஆணையை வழங்கியுள்ளனர்.

எந்த சந்தர்ப்பத்திலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெறமுடியாது என்று முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜயவர்தன தெளிவாக தெரிவித்திருந்தார். ஆனால் கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் இந்த நிலைப்பாட்டை புறந்தள்ளி சமகால அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை மக்கள் வழங்கியுள்ளார் என்றார் அமைச்சர்.

முன்னைய அரசாங்கத்திலும் புதிய அரசியல் யாப்புக்காக யாப்பு ஒன்று வரையப்பட்டுள்ளது. அதிலிருந்த சில விடயங்களில் கவனம் செலுத்த முடியும் அல்லவா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் அந்த யாப்பு திட்டத்தில் நாட்டை சமஷ்டியாக பிரிப்பதற்கான விடயங்கள் உள்ளன. அதனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார் அமைச்சர் கம்மன்பில.

# ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு - கிழக்கு புறக்கணிக்கப்படாது

## அமைச்சர் டக்ளஸிடம் ஜனாதிபதி கோட்டாபய உறுதி





ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் வடக்கு, கிழக்கு புறக்கணிக்கப்பட மாட்டாது என்றும் குறித்த பிரதேசங்களுக்கான ஒதுக்கீடு உரிய முறையில் விரைவில் வழங்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரால் குறித்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குறுதிக்கமைய நாடளாவிய ரீதியில் வறிய குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் அரசாங்க வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டம் வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தின்போது பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டின் ஏனைய பிரதேச மக்களைப் போன்று வடக்கு, கிழக்கு மக்களும் ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தின் பலாபலன்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி மற்றும் பிரதமர், ஒரே நாடு ஒரே சட்டம் என்பதில் இந்த அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது என்ற அடிப்படையில் எந்தவகையான பிரதேச - இன – மத ரீதியான பாகுபாடுகளும் தலைதூக்க இடமளிக்கப்படாது என்பதை வலியுறுத்தியதுடன், ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு தற்போது ஒருசில காரணங்களுக்காக தற்காலிகமாக தடுத்துநிறுத்தப்பட்டபோதிலும் விரைவில் வடக்கு, கிழக்கு பிரதேங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனவும் குறித்த பிரதேச மக்கள் தேவையற்ற வகையில் குழப்பமடையத் தேவையில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.








வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவின் துட்டுவாகை கிராமத்தில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கும் கிராமத்திற்குான நுழைவாயில் கோபுரத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் திறந்துவைத்தபோது...

## வடக்கில் 6,000 தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை

வடமாகாணத்தில் காணப்படும் 6,000 தொழிலாளர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கம் என்பன கூட்டாக கோரிக்கை முன்வைத்துள்ளன.

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் மற்றும் புதிய அரச பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனுக்குமான சந்திப்பு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

இதன்போது பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாணத்தில் 6,000 தொழிலாளர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அவற்றை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். வவுனியா நகர சபையை விரைவாக மாநகர சபையாக தரமுயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். வவுனியா நகர சபையிலுள்ள 11 தொழிலாளர்கள் வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்றும் நியமனம் இன்னும் வழங்கப்படவில்லை. இதனை வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் தனியான பிரதேச சபையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கத்துடன் பேசி நடவடிக்கை எடுக்கவேண்டும். முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் கலந்துரையாடி உரிய தீர்வை விரைவில் பெற்றுத்தருவதாக மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவர் லோகநாதன், புதிய அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் செல்வேந்திரன் மற்றும் பொது ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## கூமாங்குளத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு!



வவுனியா, கூமாங்குளம் கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கூமாங்குளம் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தந்தையுடன் குறித்த இளைஞனும் வீட்டில் இருந்துள்ளார். தந்தை 7 மணியளவில் தொழில் நிமித்தம் வெளியில் சென்றுள்ளார். பின்னர் 8 மணியளவில் குறித்த இளைஞனின் சகோதரன் வீட்டிற்கு வருகை தந்த சமயத்தில் வீட்டின் அறையினுள் அந்த இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக கிடந்ததை அவதானித்துள்ளார்.

அயலவரின் உதவியுடன் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

26 வயதுடைய தங்கவேல் சிவகுமார் என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.



## பாடசாலைக் கட்டிட அடிக்கல் இடப்பட்டது



(வவுனியா)

வவுனியா பாவக்குளம் படிவம் - 2 அல்-அமீன் பாடசாலைக்கு இரண்டு மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

குவைட் நாட்டு மக்களின் நிதி அனுசரணையுடன் இக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளதுடன், அதற்கான அடிக்கல்லை வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் நாட்டினார்.

இதன்போது வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ராதாகிருஷ்ணன், குவைட் நிதிப் பங்களிப்பாளர்களின் பிரதிநிதி, பாடசாலை அதிபர் சா.புஹாரி, நகரசபை உறுப்பினர் பாய்ஸ் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## பொலிஸ் திணைக்களத்தின் 154ஆவது ஆண்டு நிறைவையொட்டி மரம் நாட்டிவைப்பு





இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 154ஆவது ஆண்டு நிறைவையொட்டி பயன்தரும் மரங்களை நாட்டி வைக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.ஆர்.மானவடுவின் தலைமையில் வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸால டி சில்வா கலந்துகொண்டு பாடசாலை வளாகத்தில் பயன் தரும் மரங்களை நாட்டிவைத்ததுடன், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பாடசாலை சமூகத்தினரும் மரங்களை நாட்டிவைத்தனர்.

## முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 92 பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டன







(மன்னார் நகர் நிருபர்)

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 92 பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனக் கடிதம் நேற்று முன்தினம் முசலி பிரதேச செயலாளர் சி.ராஜீவினால் வழங்கப்பட்டது.

92 பட்டதாரி பயிலுனர்களும் அன்றைய தினமே முசலி பிரதேச செயலகத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனம் வழங்குவது தொடர்பாக பரிசீலினைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், முசலி பிரதேச செயலாளர் சி.ராஜீவின் துரித நடவடிக்கைகளால் அன்றைய தினம் குறித்த பட்டதாரி பயிலுனர்களுக்கான நியமனங்கள் முசலி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்கிய கிராமசேவையாளர்



வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை பெய்த கடும் காற்றுடன் கூடிய ஆலங்கட்டி மழையால் 55 குடும்பங்களைச் சேர்ந்த 154 பேர் பாதிப்படைந்தனர்.

மரக்காரம்பளை கிராம சேவையாளர் பிரிவில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை அப்பகுதி கிராமசேவையாளர் நா.ஸ்ரீதரன் திரட்டி பிரதேச செயலகம் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கியிருந்தார்.

இந்நிலையில், கிராம சேவையாளரின் முயற்சியால் மாவட்ட அனர்த்த முகாமைத் துவத்தினால் மக்களின் உடனடி தேவையைக் கருத்திற்கொண்டு 42 தரப்பாள்கள் கிராம சேவையாளரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. அதனை கிராம சேவையாளர் நா.ஸ்ரீதரன் கடந்த செவ்வாய்க்கிழமை கணேசபுரம் பகுதியில் பாதிக்கப்பட்ட 42 குடும்பங்களுக்கு வழங்கினார்.

## பன்றிக்கெய்தகுளம் மக்களின் பயம் தீர்கிறது: புதிய புகையிரதக் கடவை அமைக்க இணக்கம்!



வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவையை மூடி அதற்கு அருகில் பாதுகாப்பான புதிய புகையிரதக் கடவையொன்றை அமைப்பதற்கு நேற்றைய கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவை சட்டவிரோதமானது என்றும், அப்பகுதியில் புகையிரதத் திணைக்களத்தால் கடவை எவையும் அமைக்கப்படவில்லை என்றும் புகையிரதத் திணைக்களம் தெரிவித்து வந்ததுடன், இந்த புகையிரதக் கடவையூடான போக்குவரத்தையும் தடைசெய்திருந்தது. எனினும், பொதுமக்கள் விடுத்த கோரிக்கைகளுக்கமைய பயணத்தடை விலத்திக்கொள்ளப்பட்ட நிலையில், நேற்றையதினம் மீண்டும் குறித்த பாதையை மூடுவதற்காக புகையிரதத் திணைக்கள அலுவலர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பான கலந்துரையாடலொன்று ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், புகையிரதத் திணைக்கள அலுவலர்கள், ஓமந்தை பொலிஸார், தெற்கு பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம், பிரதேச சபை உறுப்பினர்களான கோ.அஞ்சலா, பூ.சந்திரபத்மன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் மற்றும் அப்பகுதி மக்களும் கலந்துகொண்டனர்.

அந்தவகையில் தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிலிருந்த புகையிரதக் கடவையை மூடி அதற்கு அருகில் பாதுகாப்பான புதிய புகையிரதக் கடவையொன்றை அமைப்பதற்கு கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது. புதிய பாதை அமைக்கும்வரை தற்போது பாவனையிலுள்ள பாதையை மக்கள் பாவனைக்காக விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், புதிய கடவைக்கான வீதி அமைக்கும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதியில் வசிக்கும் மக்கள் தற்போதுள்ள கடவையையே தமது பிரதான பாதை மார்க்கமாக பயன்படுத்திவருவதுடன், கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் அக்கடவையில் இடம்பெற்ற புகையிரத விபத்தில் நான்குபேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன்
தமிழன்
தமிழன் தினசரி மற்றும் வாராந்த பத்திரிகையில் 6.2cm X 3cm அளவில் சிறுவிளம்பரங்களை பிரசுரித்திட 600 ரூபா மட்டுமே.
தொடர்புகளுக்கு:
077 693 0739, 076 139 3805

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 செப்டெம்பர் 04ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# பெரிய களைகளை அகற்றல் அவசியம்!

தொலைக்காட்சி அல்லது தினசரி செய்திகளை பார்க்கும்போது போதைப்பொருள் சம்பந்தமான குறைந்தபட்ச ஒரு செய்தியாவது இருப்பதைக் காணமுடிகிறது.

போதைப்பொருள் வைத்திருந்தவர்கள், அவை மறைக்கப்பட்டிருந்த விதம், அவற்றை விற்கவும் கடத்தவும் துணைபுரிந்தவர்கள் என்று வெளிவரும் விபரப்பட்டியல் நீண்டுசெல்கின்றது. மீட்கப்பட்ட போதைப்பொருட்கள் பலவற்றை கடத்தியவர்களை தேடிப்பார்த்தால் அந்தக் கடத்தல்களுக்கு அல்லது வர்த்தகத்திற்கு பாதுகாப்புத் தரப்பின் உதவி எப்படியோ, எந்த வகையிலோ கிடைத்திருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

சிறு குற்றங்களுக்காக கடந்த காலங்களில் பொலிஸாரால் பலர் கைதுசெய்யப்பட்ட செய்திகளை கண்டிருக்கிறோம். உணவுக்காக பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் தேங்காய் திருடிய ஒரு இளைஞன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு அவருக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைப் பார்த்து, இதுவல்லவோ சட்டம், நீதி என்று பூரித்துப் போயிருந்த மக்கள் கூட்டத்திற்கு இன்று பொலிஸாரின் செயற்பாடுகளை பார்க்கும்போது ஜீரணிக்க முடியாதென்பது உண்மைதான்.

சாதாரண பொலிஸார் மட்டுமல்ல, விசேட அதிரடிப் படையின் சில பொலிஸாரும் இந்த போதைப் பொருள் விடயங்களில் சம்பந்தப்பட்டிருப்பதை நினைத்தும் பார்க்கமுடியவில்லை. போதைப்பொருள் வர்த்தகச் செயற்பாடுகளுக்கு பணத்தை வீசியெறிந்து பாதாள உலகத்தினர் சுதந்திரமாக தமது செயற்பாடுகளை கடந்த காலங்களில் மேற்கொண்டுள்ளமை புலப்படுகின்றது.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், பாதாள உலகக் கோஷ்டியினரை ஒழித்துக்கட்டும் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை கொடுத்துவரும் அரசின் செயற்பாடுகளை பாராட்டவேண்டும். என்றாலும் இந்த நடவடிக்கைகளால் நெத்தலி மீன்களை மட்டுமே பிடித்து சுறா மீன்களை நழுவவிட்டுவிடுவார்களோ என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது. போதைப்பொருள் வர்த்தகமென்பது சர்வதேச ரீதியாக உள்ள ஒரு மாபியா வர்த்தகமாகும். கிராமத்திலுள்ள கடைக்கோடி பொதுமகன் ஒருவன் அதனை விற்கும் பிரதிநிதியாக செயற்படலாம். ஆனால், அதனை நாட்டுக்குள் கொண்டுவருவது யார்? அதனை தரம் பிரித்து நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் அனுப்புவது யார்? திடீர் பணக்காரர்களாக மாறுவோர் தொடர்பில் கண்டறியும் பொறிமுறை ஏதாவது அரசிடம் இருக்கிறதா? அரசியல்வாதிகள் சடுதியாக பணக்கார முதலாளிகளாக மாறுவது எப்படி? போன்ற விடயங்களை அரசாங்கம் தேடியாக வேண்டும்.

ஏழை மக்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி, அவர்களுக்கு பணத்தின் மீதான ஆசையை அதிகரிக்கவைக்கும் போதைப்பொருள் வர்த்தகர்கள் மறுபுறம் சமூகத்தின் சீரழிவுக்கும் முக்கிய காரணமாக இருக்கின்றனர். நன்றாக இருந்த பல குடும்பங்கள் சந்ததி சந்ததியாக சீரழிந்து சின்னாபின்னமாவதற்கும் நாடு பின்னடைவைச் சந்திப்பதற்கும் போதைப் பொருள்தான் முக்கிய காரணியாக இருக்கிறது. ஒரு காலத்தில் கொழும்பில் மட்டுமே கேள்விப்படும் போதைப்பொருட்களெல்லாம் இன்று வடக்கு கிழக்கு, மலையகமென பட்டிதொட்டியெல்லாம் பரவிக் கிடக்கின்றன. இவையெல்லாம் சாதாரண ஒரு மக்கள் கூட்டத்தால் அல்லது குழுவொன்றினால் விற்கப்படுபவையோ அல்லது விநியோகிக்கப்படுபவையோ அல்ல.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முன்னர், பாதாள உலகத்தினரைக் கட்டுப்படுத்த முன்னர் அவற்றின் பின்னணியில் இருக்கும் சக்திகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடையாளம் காணவேண்டும். அரசியல் சக்திகளும் அவற்றின் பின்னால் இருப்பதால், பெரிய களைகளை முதலில் அகற்றியாகவேண்டும். இல்லாவிடில் சரியான அறுவடையைச் செய்துவிட முடியாது!

“தமிழன்” பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# தேர்தலில் ஏற்பட்ட சரிவின் பின்னர் நெருக்கடியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு!

இலங்கையில் தமிழ் பிரதான முதலாளித்துவக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓகஸ்ட் 5 அன்று நடந்த பொதுத் தேர்தலில், 10 ஆசனங்களை மட்டுமே பெற்றது. கூட்டமைப்பு கடந்த நாடாளுமன்றத்தில் 16 ஆசனங்களைக் கொண்டிருந்தது. அதன் ஒட்டுமொத்த வாக்கு, அது 2015 தேர்தலில் பெற்ற 5,15,963 வாக்குகளிலிருந்து கூர்மையாக வீழ்ச்சியடைந்து 3,27,168 ஆகக் குறைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை அமைப்பு (ரெலோ) மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (புளொட்) ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தமிழரசுக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைமை வகிக்கின்றது.

தேர்தலில், தமிழரசுக் கட்சித் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா மற்றும் அதன் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே. துரைராஜசிங்கம் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டனர். ஏனைய தலைவர்கள் இப்போது கட்சியின் உயர்மட்ட பதவிகளைப் பிடிக்க முயல்கின்றனர். மேலும் பிளவுகளைத் தவிர்ப்பதற்காக, தற்போதைய அலுவலர்களை வெளியேற்றி, முறையே புளொட் மற்றும் ரெலோ தலைவர்களை தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர்களாக மற்றும் அமைப்பாளராக நியமிக்க திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



எத்தகைய ஒட்டுப்போடும் நடவடிக்கைகளை எடுத்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வெடிக்கும் நெருக்கடியை தீர்க்கமுடியாது. இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நெருக்கடி மட்டுமன்றி, ஒட்டுமொத்த தமிழ் முதலாளித்துவ – தேசியவாத முன்னோக்கினதும் திவால்நிலையின் வெளிப்பாடாகும்.

2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் (ஸ்ரீல.பொ.ஜ.மு.) வேட்பாளரான கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான ‘குறைவான தீமை’ என தூக்கிப் பிடித்தது.

ராஜபக்ஷ, தமிழ்த் தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளிடையே வெறுக்கப்படுபவராவார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின்கீழ் பாதுகாப்புச் செயலாளராக இருந்த அவர், பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இரத்தக்களரி போரின் இறுதி ஆண்டுகளில் தாக்குதல்களுக்கு தலைமை தாங்கினார். இலங்கை இராணுவம் 2009 மே மாதம் போரை முடித்தது. ஐ.நா. அறிக்கைகளின்படி இதன்போது குறைந்தபட்சம் 40,000 பொதுமக்களைக் கொன்றதன் மூலம் புலிகளை நசுக்கியது, ஐ.நா.படி, மேலும் பல குற்றங்களைச் செய்தது.

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ வெற்றிபெற்ற பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடீரென ஒரு திருப்பத்தை எடுத்து, ‘தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றும் அரசியலமைப்பு மாற்றத்தை’ செய்ய ஒப்புக்கொண்டால் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கான தனது விருப்பத்தை அறிவித்தது. கட்சி கொழும்பில் ‘அதிகாரத்தில் இருப்பவர்களுடன் தொடர்பில் இருக்கவேண்டும்’ என்று கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கூறினார்.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்பான ஒரு அதிகாரிக்கு ஆதரவளிக்க முடிவெடுத்தமை இந்தக் கட்சிக்கு எதிரான வெகுஜனக் கோபத்தை மேலும் தூண்டியது.



2009இல் விடுதலைப் புலிகளின் தோல்வியை அடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூர்மையான வலதுசாரி மாற்றத்தை மறுக்க முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் புவிசார் அரசியல் நலன்களுக்கு சேவைசெய்யும் அதேவேளை, கொழும்புடனான ஒரு ‘அரசியல் கொடுக்கல் வாங்கலுக்கு’ அமெரிக்க ஆதரவை நாடுவதை நோக்கி தமிழ்க் கூட்டமைப்பு வெளிப்படையாகத் திரும்பியது. இந்தியாவுடனான இராணுவ மற்றும் மூலோபாய உறவுகளை வலுப்படுத்தும் அதேவேளை, வொஷிங்டன் சீனாவுக்கு எதிராக கடுமையாக நிற்கிறது.

வொஷிங்டன் மற்றும் புதுடில்லி இரண்டும் புலிகளுக்கு எதிரான மஹிந்த ராஜபக்ஷவின் போரையும் அவரது ஜனநாயக விரோத ஆட்சிமுறையையும் ஆதரித்தன. எவ்வாறாயினும், இராணுவத் தளபாடங்களையும் முதலீடுகளையும் பெறுவதற்காக பீஜிங்குடனான ராஜபக்ஷவின் வளர்ந்துவந்த உறவுகளுக்கு இரு நாடுகளும் விரோதமாக இருந்தன. இந்தியப் பெருங்கடலில் மூலோபாய ரீதியில் அமைந்துள்ள இலங்கையை அதன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வொஷிங்டன் விரும்பியது.

2015 இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் வொஷிங்டன், மஹிந்த ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்காக ஒரு ஆட்சிமாற்ற நடவடிக்கையை மறைமுகமாக திட்டமிட்டு, அவருக்குப் பதிலாக மைத்ரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக நியமித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் போலி–இடது குழுக்களுடனும் இணைந்து இந்த சதி நடவடிக்கைக்கு முழு ஆதரவளித்தது. சிறிசேன ‘நல்லாட்சியை’ கொண்டுவருவதாகவும், வாழ்க்கை மற்றும் சமூக நிலைமைகளை மேம்படுத்துவதாகவும் கூட்டமைப்பு வஞ்சத்தனமாக பிரசாரம் செய்தது.



புதிய அரசாங்கம் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதாகவும், போரினால் ஏற்பட்ட சமூக அழிவை சரிசெய்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியளித்தது. அது சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் ஏறத்தாழ ஒரு பங்காளியாகவே மாறியது.

எவ்வாறாயினும், அதிகாரப் பகிர்வுக்கான கூட்டமைப்பின் கோரிக்கைகளில் வொஷிங்டனுக்கு எந்த அக்கறையும் கிடையாது. ஆனால், அது அதன் புவிசார் அரசியல் நலன்களுக்கு சாதகமானதாக கருத்தும் கொழும்பு ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்கு கூட்டமைப்பு ஒத்துழைக்க வேண்டும் என விரும்பியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் அமெரிக்க கோரிக்கைகளுக்கு கீழ்ப்படிந்து பின்பற்றுகிறது. போர்க்குற்ற விசாரணைகளை அடக்குவதற்கும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான கோரிக்கைகளைத் தடுப்பதற்கும், இராணுவம் ஆக்கிரமித்துள்ள நிலங்களை விடுவிப்பதைத் தடுப்பதற்கும், காணாமல்போன நபர்களின் வழக்குகளில் நீதியை மறுப்பதற்கும் கொழும்பு ஆட்சிக்கு சம்பந்தனும் சுமந்திரனும் உதவினார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் தொடர்ச்சியான எதிர்ப்பையும் மீறி சர்வதேச நாணய நிதியம் ஆணையிட்ட சிக்கன திட்டத்தை சிறிசேன – விக்கிரமசிங்க ஆட்சி அமுல்படுத்துவதற்கு தமிழ்க் கூட்டமைப்பு ஒத்துழைத்தது. குறிப்பாக, 2018இல் தொடங்கி சர்வதேச வர்க்கப் போராட்டங்களுக்கு மத்தியில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட வேலைநிறுத்தங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. இது இறுதியில் கொழும்பில் ‘ஐக்கிய அரசாங்கத்தை’ கவிழ்த்து, தமிழ்த் தொழிலாளர்கள் மற்றும் வறியவர்களின் பார்வையில் தமிழ்க் கூட்டமைப்பை மேலும் இழிவுக்குள்ளாக்கியது.



இந்தத் தேர்தல் 1948இல் உத்தியோகபூர்வமாக சுதந்திரமடைந்ததற்குப் பிறகு நாட்டை மாறி மாறி ஆட்சிசெய்த பாரம்பரிய முதலாளித்துவக் கட்சிகளின் – விக்கிரமசிங்கவின் ஐ.தே.க. மற்றும் சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (ஸ்ரீல.சு.க.) சரிவைக் கண்டது.

கொழும்பிலுள்ள தங்கள் சகாக்களைப் போலவே, தமிழ்த் தேசியவாதக் கட்சிகளும், கொவிட்–19 பூகோளத் தொற்றுநோய்களுக்கு மத்தியில், பெருவணிகமும் அரசாங்கமும் சமூக உரிமைகள் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்கு எதிராக தொழிலாளர்கள் மற்றும் ஏழைகள் மத்தியில் சமூக கோபம் வளர்ச்சியடைவதையிட்டு பீதியடைந்துள்ளன. ஜனாதிபதி ராஜபக்ஷ தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கி வேகமாக நகர்கிறார்.

முதலாளித்துவ கட்சிகள், தொழிலாள வர்க்கத்தின் மீதான அச்சத்திலும் பகைமையிலும் ஒன்றுபட்டுள்ளன. இதுவும் ராஜபக்ஷவை தமிழ்க் கூட்டமைப்பு அணுகுவதற்கான அடிநிலைக் காரணமாக இருக்கின்றது. குறிப்பிடத்தக்க வகையில், அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தங்கள் சகாக்களுடன் சேர்ந்து ஜனாதிபதியின் கொள்கை உரையை வாக்களிக்காமல் அங்கீகரித்தன.

தீவின் மீதான ஏகாதிபத்திய காலனித்துவ ஒடுக்குமுறையில் வரலாற்று ரீதியாக வேரூன்றியிருக்கும் தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான இனவாத பாகுபாடு மற்றும் இரத்தக்களரிக்கான பொறுப்பு, பிரதானமாக கொழும்பு ஆளும் கும்பலுக்கு உரியதாகும். எவ்வாறெனினும், தங்கள் சொந்த தேசியவாத அரசியலின் ஆதரவில் தங்கியிருக்கும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், தமிழ்த் தொழிலாளர்கள் மற்றும் வறியவர்களுக்கு ஒரு பேரழிவை உருவாக்கின. இந்தப் பேரழிவில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து 1949இல் உருவான தமிழரசுக் கட்சி, கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக முக்கிய பங்கு வகித்துள்ளது.

அப்பொழுது யு.என்.பி. அரசாங்கத்தின் பங்காளியாக இருந்த ஏ.சி.டி.சி. அதன் 1948 குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்தது, இது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை இரத்துச்செய்து, தொழிலாளவர்க்கத்தைப் பிளவுபடுத்த வகுப்புவாத பாகுபாட்டைத் தொடங்கியது. அப்போதிருந்து, ஐ.டி.ஏ.கே. தமிழ்த் தேசியவாதத்தின் ஒரு சாம்பியனாக முன்வந்துள்ளது, அதேநேரத்தில் கொழும்பு ஆட்சிகள் தமிழ் எதிர்ப்புப் பிரசாரங்களை தீவிரப்படுத்தின.

1964இல், லங்கா சம சமாஜ கட்சி, (ல.ச.ச.க.), சிங்கள–பௌத்த மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்ட, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ கூட்டணி அரசாங்கத்திற்குள் நுழைந்து, சோஷலிச சர்வதேசவாத கொள்கைகளை காட்டிக்கொடுத்தமை, தமிழ்த் தேசியவாத கட்சியை பலப்படுத்தியது. அடுத்து வந்த ஆண்டுகளில் இது 1970களில் பிரிவினைவாத புலிகள் உட்பட தமிழ் ஆயுதக் குழுக்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக 1972 அரசியலமைப்பு பௌத்தத்திற்கும் சிங்கள மொழிக்கும் உத்தியோகபூர்வ முன்னுரிமை அளித்தது. இந்த அரசியலமைப்பின் சிற்பி ஸ்ரீல.சு.க. தலைமையிலான கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சராக இருந்த ல.ச.ச.க. தலைவர் கொல்வின் ஆர். டி சில்வா ஆவார்.

இதற்கு பதிலிருப்பாக, தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸும் இணைந்து 1972இல் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியை (TULF) உருவாக்கின. 1976இல், யாழ்ப்பாணத்திற்கு அருகிலுள்ள வட்டுக்கோட்டையில் நடத்திய அதன் மாநாட்டில், சுயநிர்ணயத்தை மீண்டும் வலியுறுத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தனியான ‘மதச்சார்பற்ற, சோஷலிச தமிழீழ அரசுக்கு’ அழைப்பு விடுத்தது.

தமிழரசுக் கட்சியும் ஏனைய தமிழ்க் கட்சிகளும், தொழிலாளர்களை இன அடிப்படையில் பிளவுபடுத்த தமிழ்த் தேசியவாதத்தைப் பயன்படுத்தின. இது கொழும்பு உயரடுக்கினதும் பேரினவாத குழுக்களினதும் சிங்கள – இனவாத ஆத்திரமூட்டல்களுக்கு மட்டுமே உதவியது. இது 1983இல் தொடங்கிய மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இன்று, தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, விடுதலைப் புலிகளின் மிச்ச சொச்சங்களும் மற்றும் 2001இல் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமாக அனைத்துமே இதேபோன்ற பாதையைப் பின்பற்றுகின்றன:

அதாவது, புதுடில்லி மற்றும் வொஷிங்டனின் ஆதரவோடு அதிக அதிகாரத்திற்காக கொழும்பு உயரடுக்கினருடன் பேரம்பேசும் அதேவேளை, இறுதியில் அமெரிக்க நலன்களுக்கு இணங்குவதாகும். இது தமிழ்த் தேசியவாதத்தின் பிற்போக்கான முட்டுச் சந்தாகும்.

ல.ச.ச.க. செய்த மாபெரும் காட்டிக்கொடுப்புக்கும் தமிழ் தேசியவாதத்திற்கும் எதிரான அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தது சோஷலிச சமத்துவக் கட்சியும் (சோ.ச.க.) மற்றும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமுமே (பு.க.க.) ஆகும். 1968இல் பு.க.க. ஸ்தாபிக்கப்பட்டதில் இருந்தே அது முன்னெடுத்த போராட்டங்கள் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. எங்கள் போராட்டம் ட்ரொட்ஸ்கிச நிரந்தர புரட்சியின் கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டது. முதலாளித்துவ வளர்ச்சி தாமதமான நாடுகளில் சர்வதேச அளவில் சோஷலிச புரட்சிக்கான தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய போராட்டத்தால் மட்டுமே ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும்.

சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் தொழிலாளர்களின் சர்வதேச ஐக்கியத்திற்காகப் போராடும் சோ.ச.க., சோஷலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நின்று, வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்றக் கோருவதுடன், சர்வாதிகாரம், போர் மற்றும் சமத்துவமின்மையை எதிர்க்கிறது. தெற்காசிய மற்றும் சர்வதேச அளவில் சோஷலிச குடியரசுகளின் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக ஸ்ரீலங்கா – ஈழம் சோஷலிச குடியரசு என்பதே அதன் முன்னோக்காகும். சோ.ச.க.வின் இடைவிடாத போராட்டத்தை வாசித்து, இந்த கட்சியை கட்டியெழுப்ப முன்வருமாறு தமிழ் உழைக்கும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

***நன்றி - சோஷலிச இணையத் தளம்***

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*கொரோனாவால் இந்தியாவின் பொருளாதாரம் பின்னடைவை சந்தித்து, கிட்டத்தட்ட மைனஸ் 23 புள்ளிகளாக பின்னடைவை சந்தித்திருப்பதாக தமிழக நண்பர் ஒருவர் பேசும்போது சொன்னார். நமது நாட்டில் பெரும் பின்னடைவு இல்லாவிட்டாலும் கூட அண்டை நாடுகளின் தாக்கங்களால் அந்த பாதிப்பு நமக்கும் வரும் என்று தெரிகிறது.*

*உலகளவில் எட்டரை இலட்சம் பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ள சூழ்நிலையில், நாம் வழமைபோல நமது வேலைகளை செய்துகொண்டிருக்கிறோம் என்றால் கொரோனாவுடன் சேர்ந்துவாழ நாங்கள் பழகியிருக்கிறோம் என்றுதானே அர்த்தம் !*

**- சிவா -**
**siva@liberty.lk**

# இலங்கக்கோன் அறிக்கையை ஆய்வுசெய்ததன் பின்னர் பொலிஸ் பிரிவு முழுமையாக மறுசீரமைக்கப்படும்



## இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்ககோனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை ஆய்வுக்குட்படுத்திய பின்னர் பொலிஸ் சேவை மறுசீரமைப்பு அறிமுகப்படுத்தப்படும் - என நீர்ப்பாசன அமைச்சரும், உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்ககோனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் ஆய்வுக் குட்படுத்தப்பட்ட பின்னர் பொலிஸ் சேவையை மறுசீரமைப்பதற்கு குறித்த பரிந்துரைகளை அமைச்சு அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொலிஸ் தலைமையகத்தை பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் அமைச்சர் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜீ.டீ.எச்.கமல் குணரத்ன (ஓய்வு) ஆகியோர் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

சிறந்த மற்றும் தரமான பொலிஸ் சேவையை பொதுமக்களுக்கு வழங்க பணியாற்றுவதற்கான சிறந்த சூழல் மற்றும் தொழில் திருப்தி முக்கியமானதாகும். பொலிஸ் அதிகாரிகளின் நலன்புரிகளை கருத்திற்கொண்டு அவர்களின் சேவையின் மதிப்பை உயர்த்துவதற்காக நாட்டின் பொலிஸ் நிலையங்களின் வெளிப்புற தோற்றங்களை மேம்படுத்த அமைச்சு திட்டமிட்டுள்ளது. பொலிஸ் நிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் நிலை உள்ளிட்ட உள்ளக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளால் வலுவான கண்காணிப்பு முறைமையை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

நான் பொலிஸ் சேவையில் இருந்த நாட்களில், எங்கள் சிரேஷ்ட அதிகாரிகள் ஒரு சிறிய விடயமாக இருந்தாலும் கூட அவற்றை ஆராயும் அளவுக்கு கடுமையான கண்காணிப்பு முறைமையை மேற்கொண்டிருந்தனர். பொலிஸ் சேவையின் சிறந்த நற்பெயரைப் பெற இதுபோன்ற முறைமையை நாங்கள் மீண்டும் கொண்டுவர வேண்டும். இல்லாவிடில் அது அரசுக்கு ஓர் அவப்பெயராக மாறிவிடும். மக்களின் எதிர்பார்ப்புகளை அடைய பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் சிறந்த ஒழுக்கத்தைப் பராமரிப்பதும் அவசியமாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன,

பாதாள உலக குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் மற்றும் கப்பம் பெறல் போன்ற குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டுவருவார்கள் என எதிர்பார்த்தே மக்கள் இந்த அரசாங்கத்தை தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே, அவ்வாறான குற்றச்செயல்களிலிருந்து நாட்டை விடுவித்து மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் பொலிஸாருக்கு முக்கிய பங்கு உள்ளது.

பாதாள உலக குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல், திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களை முறியடிக்க பொலிஸ் அதிகாரிகள் பாரிய ஒத்துழைப்புகளை வழங்கி தற்போது பொதுமக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் குறித்த குற்றச்செயல்களுக்கு எதிராக தொடர்ந்தும் போராடி வரும் அதேவேளை, ஊழலில் ஈடுபடும் சில பொலிஸ் அதிகாரிகளை திருத்தி அவர்களை சரியான பாதையில் இட்டுச்சென்று பொலிஸ் சேவையை மக்கள் நட்புச் சேவையாக மாற்றுவது சிரேஷ்ட அதிகாரிகளின் பொறுப்பாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

# அமைச்சரவைத் தீர்மானங்கள்!



**நேற்றுமுன்தினம் (2020.09.02) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:**

### 01. முதலீட்டு மேம்பாடு தொடர்பில் அமைச்சரவை உப குழுவொன்றை நியமித்தல்

சௌபாக்கிய தொலைநோக்குக் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வறுமையை ஒழிப்பது அனைத்துத் தரப்பினர்களுக்கும் பலன்கள் கிடைக்கக்கூடிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான மாற்று உற்பத்திப் பொருளாதாரத்திற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வசதிகளை விரிவுபடுத்தலுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

இதற்காக கொள்கை ரீதியிலும் நடைமுறையிலும் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியின் தலைமையிலும் கீழ் குறிப்பிட்ட அமைச்சரவை அங்கத்தவர்களைக்கொண்ட முதலீட்டு மேம்பாடு தொடர்பான அமைச்சரவை உப குழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, காமினி லொக்குகே, பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, விமல் வீரவங்ச, மஹிந்த அமரவீர, எஸ்.எம்.சந்திரசேன, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, ரமேஸ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க , ரோஹித்த அபே குணவர்தன, அலி சப்ரி ஆகியோர் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேபோன்று இந்த உப குழுவின் பணிகளுக்காக பின்வரும் இராஜாங்க அமைச்சர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

துமிந்த திஸாநாயக்க, ஜயந்த சமரவீர, திலும் அமுனுகம, டீ.வீ.சானக, நாலக்க கொடஹேவா அஜித் நிவாட் கப்ரால் ஆகிய இராஜாங்க அமைச்சர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

### 02. நடுத்தர வகுப்பின வருமான பயனாளிகளுக்கு அவர்களது வருமானத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய வீட்டை நிர்மாணிப்பதற்காக கடன்பத்திரங்கள் மூலம் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளுதல்

அரச மற்றும் தனியார்துறையில் பணியில் ஈடுபட்டுள்ள நடுத்தர வகுப்பின வருமான பயனாளிகளின் சேவைக்காக அவர்களின் வருமானத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய வீட்டை பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் வீடமைப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2020.05.27ஆம் திகதி அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கமைவாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அடிப்படை மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 5 வருட காலத்திற்கு செல்லுபடியான 25 பில்லியன் ரூபா கடன் பத்திரத்தை விடுவிப்பதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் பிரதமர் சமர்ப்பித்த பரிந்துரை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று திட்டத்தின்கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளை விற்பதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஊடாக கடன் பத்திரத்தை செலுத்துவதற்கும், இந்த வீட்டைப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட கொள்வனவாளர்களுக்கு 25 தொடக்கம் 30 வருடகால எல்லைக்கான நிவாரண கடன் குறைந்த கடன் வட்டி அடிப்படையில் அரச வங்கிகள் மூலம் வீட்டுக் கடனை வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 03. 20ஆவது அரசியல் யாப்பு திருத்தம் மற்றும் புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்கான திருத்த வரைபு

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் யாப்பில் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 19ஆவது திருத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை மற்றும் குறைபாடுகளை களைவதற்காக குறுகிய கால நடவடிக்கை என்ற ரீதியில் 20ஆவது அரசியல் யாப்பு திருத்தத்திற்கான திருத்தச் சட்டமூலத்தை வகுப்பதற்காக சட்டதிருத்த வரைபிற்கு ஆலோசனை வழங்குவதற்கு 2020.08.19 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைவாக சட்டதிருத்த வரைபு பிரிவினால் தயாரிக்கப்பட்ட திருத்தச் சட்டமூலம் நீதி அமைச்சரினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த திருத்தச் சட்டமூலம் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் 13ஆவது திருத்தம் மற்றும் அதற்கு ஏற்புடையதாகாது என்பதுடன், அரசியல் யாப்பின் 82 (5) யாப்பிற்கு அமைவாக நாடாளுமன்றத்தில் 3 இல் 2 இற்கு குறையாத வாக்களிப்புடன் நிறைவேற்றக் கூடிய நிலை இருப்பதாகவும் சட்டமா அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலைப்பாடு அமைச்சரவையினால் கவனத்திற்கொண்டு அந்த சட்டதிருத்த மூலத்தை அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்கும், அதனைத் தொடர்ந்து அங்கீகாரத்திற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2020.08.19ஆம் திகதியன்று அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்ட வகையில் நீதி அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரையை கவனத்திற்கொண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்கான அடிப்படை திருத்தச் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட நிபுணர்களைக்கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா (தலைவர்)
ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன,
ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா,
ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன,
பேராசிரியர் திருமதி நசீமா ஹமூர்தீன்,
கலாநிதி எ.சர்வேஸ்வரன்,
ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த ரத்வத்தே,
பேராசிரியர் வசந்த செனவிரத்ன,
பேராசிரியல் ஜி.எல்.பீரீஸ்.

### 04. தேசிய வர்த்தகக் கொள்கையொன்றை தயாரிப்பது தொடர்பில் புத்திஜீவிகள் குழுவொன்றை நியமித்தல்

அமைச்சரவையால் 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய வர்த்தகக் கொள்கையை வகுப்பதில் உரியவகையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் கேட்டறிந்து அதன் கொள்கை வகுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக தற்போதைய காலத்துக்குப் பொருத்தமான வகையில் புதிய தேசிய வர்த்தகக் கொள்கையொன்றை வகுப்பதற்காக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் புத்திஜீவிகள் குழுவொன்றை நியமிப்பதற்காக வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 05. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலைப்பின்னல் முதலான நிறுவனங்களுக்கான மீண்டெழும் செலவுக்காக (Recurring expense) திறைசேரியில் நிதியைப் பெற்றுக்கொள்ளுதல்.

கொவிட் - 19 வைரஸ் தொற்று பரவியதைத் தொடர்ந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலைப்பின்னல் ஆகியவற்றின் வருமானம் குறைவடைந்ததன் காரணமாக இந்த நிறுவனங்களின் சம்பளம் மற்றும் அத்தியாவசிய செலவுகளை சமாளிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான 4 மாத காலத்திற்கு இந்த நிறுவனங்களின் அத்தியாவசிய **Recurring expense** செலவுகளுக்கான நிதியை திறைசேரியில் பெற்றுக்கொள்வதற்காக வெகுஜன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிறுவனங்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக மூலோபாய திட்டத்தை தயாரித்து திறைசேரியின் உடன்பாட்டைப் பெற்று அந்தத் திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 06. பிரதேச தொழில் பேட்டைகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக காணிகளை ஒதுக்கீடுசெய்து வழங்குதல்.

பிரதேச மட்டத்தில் தொழிற்சாலைகளை மேம்படுத்தும் நோக்கத்தைக்கொண்டு கைத்தொழில் அமைச்சரால் பிரதேச தொழில் பேட்டை அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பிரதேச கைத்தொழில்துறை சேவை குழுவொன்றினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபாரிசுகளை அடிப்படையாகக்கொண்டு இந்த வேலைத்திட்டத்தின்கீழ் இரத்மலானை, களுத்துறை, மில்லேவ, நாலந்த, உலப்பனை, மாகந்துர, ஊவா - பரணகம மற்றும் மட்டக்களப்பு ஆகிய தொழில்பேட்டைகளில் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக 9 முதலீட்டாளர்களுக்கு 35 வருட காலத்திற்காக குத்தகை அடிப்படையில் காணிகளை ஒதுக்கீடுசெய்து வழங்குவதற்கு கைத்தொழிற்றுறை அமைச்சரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 07. இலங்கையில் இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கை.

இலங்கையில் இயற்கை எரிவாயு தொடர்பான திருத்தச் சட்டமூலத்தில் தேசிய கொள்கையை ஆராய்ந்து பார்த்து தேவையான திருத்தத்தை சமர்ப்பிப்பதற்காக புத்திஜீவிகளைக்கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்கு 2020 பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக இந்தப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட 17 அங்கத்தவர்களைக்கொண்ட புத்திஜீவிகள் குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் 'இயற்கை எரிவாயு கொள்கை' எரிசக்தி அமைச்சரால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அது தொடர்பில் அமைச்சரவையில் கொள்கை ரீதியில் அங்கீகாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

### 08. புத்தளம் நிலக்கரி அனல் மின் நிலையத்திற்கு உடனடியாக கொள்வனவுசெய்யும் நடவடிக்கையின்கீழ் தேவையான நிலக்கரியை கொள்வனவுசெய்தல்.

புத்தளம் நிலக்கரி அனல் மின் நிலையத்திற்காக உடனடியாக கொள்வனவுசெய்யும் நடவடிக் கையின்கீழ் 3,00,000 மெற்றிக்தொன் நிலக்கரியை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட நிலையியற் பெறுகைக்குழுவின் சிபாரிசுக்கு அமைய **M/s Swiss Singapore Overseas Enterprises Pte. Ltd** என்ற நிறுவனத்திடம் 16.18 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக மின்சக்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. கொலன்னாவ கட்டடத் தொகுதியில் 3 எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

கொலன்னாவ எரிபொருள் களஞ்சிய கட்டட தொகுதிக்காக 3 எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை கொள்வனவுசெய்தல், நிர்மாணித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழுவின் சிபாரிசுக்கமைய **Indo – East Engineering and Construction (Lanka) Pvt. Ltd** என்ற நிறுவனத்திடம் 942.47 மில்லியன் ரூபாவை (**Vat** வரி தவிர்த்து) வழங்குவதற்காக எரிசக்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 10. அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களை செப்பனிட்டு பயன்படுத்துதல் மற்றும் ஒதுக்குதல்.

உரியவகையில் பராமரிக்கப்படாததன் காரணமாக தற்பொழுது பயன்படுத்தப்படாத பெரும் எண்ணிக்கையிலான வாகனங்கள் அரசாங்க நிறுவனங்களில் இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளதுடன், 2020 ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதியளவில் செப்பனிட்டு பயன்படுத்தக்கூடிய 4,116 வாகனங்கள் மற்றும் ஒதுக்குவதற்கான 5,588 வாகனங்கள் இருப்பதாக அடையாளங் காணப்பட்டுள்ளது.

இதற்கமைவாக செப்பனிட்டு பயன்படுத்தக்கூடிய பயனுள்ள வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவையான நிதி இல்லாத சந்தர்ப்பத்தில் தேசிய வரவு-செலவுத் திணைக்களத்தினால் அதற்கான நிதியை வழங்குவதற்கும், அவ்வாறு செப்பனிடப்பட்ட வாகனங்களை, போதுமான வாகனங்களைக் கொண்டிராத அரச நிறுவனங்களுக்கு நிதி அமைச்சின் கீழ் உள்ள கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்தின் ஊடாக உரியவகையில் வழங்குவதற்கும், செப்பனிடமுடியாத வாகனங்களை ஏற்ற நடைமுறையைக் கடைப்பிடித்து ஒதுக்குவதற்கும் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைச்சரவையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## இரத்தினபுரி மாவட்டத்தில் 2,916 பேருக்கு தொழில்வாய்ப்பு:

# பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு பயிற்சி நியமனக்கடிதங்கள் வழங்கிவைப்பு

(இரத்தினபுரி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்களுக்கு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்க வேலைத்திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 17 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்ற 2,916 பேருக்கு பயிற்சி நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன - என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்களின் நியமனம் குறித்து நேற்று ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டத்தில் 17 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்ற 2,916 பேருக்கு பயிற்சி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.



இதனடிப்படையில் அயகம பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 98 பேரும், பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 302 பேரும், எஹலியகொடை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 163 பேரும், எலபாத்த பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 120 பேரும், எம்பிலிபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 427 பேரும், கொடக்கவெல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 185 பேரும், இம்புல்பே பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 209 பேரும், காவத்தை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 58 பேரும், கலவான பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 164 பேரும், கிரியெல்ல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 82 பேரும், கொலொன்ன பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 115 பேரும், குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 227 பேரும், நிவித்திகல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 119 பேரும், ஓப்பநாயக்க பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 73 பேரும், பெல்மதுளை பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 201 பேரும், இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 267 பேரும், வெலிகம்பொல பிரதேச செயலகப் பிரிவில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பெற்றவர்கள் 106 பேருக்குமாக பயிற்சி நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

மேற்படி மாவட்டத்தில் பயிற்சி நியமனக் கடிதங்களை பெற்றுள்ள 2,916 பேருக்கும் ஒரு வருட காலம் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபொத்தாகம தெரிவித்தார்.

## பல இலட்சம் ரூபா செலவில் அமைந்த பஸ் தரிப்பிடம் பிரயோசனமற்று காணப்படுவதாக பயணிகள் விசனம்

(களுத்துறை)

அகலவத்தை நகர மத்தியில் பல இலட்சம் ரூபா செலவுடன் மந்தகதியில், பயணிகளுக்கு பிரயோசனமற்ற வகையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவரும் புதிய பஸ் நிலையத்தில் நிலவும் குறைபாடுகள் பற்றி மக்கள் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.





பழைய பஸ் நிலையம் பஸ்ஸின் உயரத்தை விடவும் மிகவும் குறைந்த உயரத்தில் அமைந்திருந்ததால் அடிக்கடி பஸ்கள் கூரையில் மோதி பழுதடைந்து பயணிகள் தலையில் உடைந்து விழும் அபாய நிலையில் காணப்பட்டதுடன், பல்வேறு குறைபாடுகள் நிலவிய பழைய பஸ் நிலையத்துக்கான புனர்நிர்மாணப் பணிகள் சில மாதங்களுக்கு முன் பல இலட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டு மந்தகதியில் நடந்து தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளது.

எனினும், புதிதாக புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குறித்த புதிய பஸ் நிலையத்தின் கட்டிடம் தற்போது முன்பு இருந்ததைவிடவும் அதிக உயரத்துடன் அமைந்துள்ளதால் காற்றுடன் கூடிய மழை காலங்களில் மழைநீர் உள்நோக்கி வீசப்படுவதாலும் வெயில் காலங்களில் சூரிய ஒளி நேரடியாக பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகள் மீது படுவதாலும் வெயில் தாங்க முடியாமல் குடையை விரித்து பிடித்துக்கொண்டு நிற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, பொதுமக்களின் வரிப் பணத்தில் இவ்வாறான வீண்விரயங்களைத் தவிர்க்கும் வகையில் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் நகரவாசிகளும் பயணிகளும் கேட்டுக் கொள்கின்றனர்.




## சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் வருடாந்த எசல பெரஹெரவை முன்னிட்டு முத்திரை வெளியீடு

(இரத்தினபுரி)

வரலாற்றுச் சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் வருடாந்த எசல பெரஹெரவை முன்னிட்டு இலங்கை தபால் திணைக்களத்தின் மூலம் 15.00 ரூபா முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்பு இடம் பெறும் முதலாவது எசல பெரஹர இதுவாகும். இம்முறை சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கமைய பெரஹர இடம்பெற்று வருகின்றது.

மேற்படி சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின்



மேற்படி முத்திரை வெளியீடு நிகழ்வு நேற்று முன்தினம் இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மகா சமன் தேவாலய கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது. இதன்போது முதலாவது முத்திரையை இலங்கை தபால்மா அதிபர் ரஞ்ஜித் ஆரியரத்ன சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவிடம் கையளித்தார்.

அரசாங்கத்தின் மூலம் சப்ரகமுவ மாகாண சமன் தேவாலயத்தின் எசல பெரஹெர தேசிய நிகழ்வாக

பெரஹர 795 ஆவது தடவையாக இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் புனித தந்தத்திற்கு தினமும் பூஜை செய்வதற்கென வெள்ளித் தட்டு ஒன்றை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மேற்படி சமன் தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே விகார ஜயசுந்தரவிடம் கையளித்தார்.

## எஹலியகொடை பிரதேசத்துக்கு மண்சரிவு மஞ்சள் எச்சரிக்கை

(இரத்தினபுரி)

எஹலியகொடை பிரதேச செயலாளர் பிரிவில் மண்சரிவு ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரண மாக மண்சரிவு இடம்பெறலாமென எதிர்பார்க்கப் படும் சகல இடங்களிலும் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி அபாய எச்சரிக்கையை எஹலிய கொட பிரதேச செயலகம், பிரதேச கிராம சேவை அதிகாரிகள் மூலம் இவ்வறிவித்தலை விடுத்துள்ளது. இப்பிரதேசத்தில் மண்சரிவு ஏற்படலாமென தேசிய கட்டிடவியல் ஆய்வு மையத்தினால் ஏற்கனவே அடை யாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வசிக்கும் மக்களுக்கு 'மஞ்சள்' அறிவிப்பு எனும் முதற் கட்ட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பிரதேச மக்கள் அவதானத்துடன் இருக்கு மாறு வேண்டப்பட்டுள்ளனர். மேலும் எஹலியகொடை முதல் தெஹியோவிற்ற வரையிலான வீதியிலுள்ள இரு பக்கங்களும் அடிக்கடி மண்சரிவு ஏற்படும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் எஹலியகொடையை அண்மித்த தெரணியகலை, யட்டியாந் தோட்டை பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மண் சரிவு ஏற்படலாமென அறிவுறுத்தல் விடுக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இரத்தினபுரி சென். ஜோக்கிம் ஆலய பிரச்சினைக்குத் தீர்வு கொடுத்தது இ.தொ.கா.

(இரத்தினபுரி)

இரத்தினபுரி, சென். ஜோக்கிம் ஆலயத்தக்குச் சொந்தமான கட்டிடத்தை அகற்றும் சூழ்ச்சிக்கு உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதற்கான தீர்வை தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.



இரத்தினபுரி, புனித ஜோக்கிம் ஸ்ரீ முத்துமாரி அம்மான் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தை அகற்றுவதற்கு சில சூழ்ச்சிகள் நடைபெறுவதாக ஆலய பரிபாலன சபை மற்றும் இளைஞர்கள், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாளின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

அவர் இவ்விடயம் குறித்து தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் அறிவித்ததையடுத்து, ஜீவன் தொண்டமான் ஆலய நிர்வாக சபையை அழைத்து கலந்துரையாடியதுடன், இவ்விடயம் குறித்து பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரனவுடனும் உரையாடி வேண்டுகோள் விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஆலய பரிபாலன சபையினர் சகிதம் நேரில் சென்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் கேட்டுக்கொண்டதற்கமைய குறித்த கட்டிடத்தை புனித ஜோக்கிம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் நடவடிக்கைகளுக்கு பெற்றுக் கொடுக்குமாறும் சுகாதாரம் சம்பந்தப்பட்ட தேவைகளை வேறு இடத்தில் அமைக்குமாறும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

## ஆன்மீக சிறப்பு மலர் வெளியீட்டு விழா

களுத்துறை மாவட்டம் இங்கிரிய, றைகம் மேற்பிரிவில் அமைந்திருக்கும் ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக நினைவு சிறப்பு மலர் வெளியீட்டு விழா, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு றைகம், மேற்பிரிவு ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் நடைபெறவுள்ள கொடிதம்ப பிரதிஷ்டை நிகழ்வின்போதே இந்த சிறப்பு மலர் வெளியிடப்படவுள்ளது. ஆன்மீக சிறப்பு மலர்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த நூல், ஆலய வரலாறு, தமிழர் வாழ்வியல், தமிழின் செழுமை, அறிவியல் உள்ளிட்ட பல்சுவை அம்சங்களை உள்ளடக்கிமுழு வண்ணத்தில் வெளியாகவிருப்பது குறிப்பிடத் தக்கது.

## இராணுவ உயரதிகாரிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு ஹட்டன் நீதவான் உத்தரவு

(ஹட்டன்)

நபரொருவரின் பாவனைக்காக பெறப் பட்ட காணியில் தனிமைப்படுத்தல் மையத்தை அமைத்த விவகாரத்தில், இராணுவ உயரதிகாரிகளை நீதிமன்றத்தில் முன்னிலை யாகுமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி மேஜர் ஜெனரல் பிரியங்க பெரேரா, இரண்டு கேர்ணல்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினரை ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு வணிக உயர்நீதிமன்றத்துடனான ஒப்பந்தத்தின்படி நபரொருவர் 50 வருட குத்தகைக்கு பெற்ற நிலத்தை, தனிமைப்படுத்தல் மையத்திற்கென இராணுவம் வலுக்கட்டாயமாக பெற்று, கட்டடங்களை அமைத்து, இராணுவ முகாமாக மாற்றியுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் - நுவரெலியா வீதியில் கொட்டகலை பகுதியில் இந்த தனிமைப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன முன்னிலையாகியிருந்தார். அந்த நிலத்தை திருப்பித்தருமாறு முறைப்பாட்டாளர் கோரியுள்ளார். இந்த மனுவை நேற்று முன்தினம் பரிசீலித்த ஹட்டன் மாவட்ட நீதிபதி ஜே.ட்ரொஸ்கி இந்த உத்தரவை பிறப்பித்தார்.

## 'பெகோ' இயந்திரம் 15 அடி பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் ஒருவர் பலி; இருவர் படுகாயம்!

பெகோ இயந்திரம் 15 அடி பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் கண்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹந்தானை தபோதாராம மாவத்தையில் ஹந்தானை வீதியிலிருந்து தபோதாராம வீதியினூடாக ஹிருஸ்ஸகல திசையை நோக்கி பயணித்த பெகோ இயந்திரமே இவ்வாறு பள்ளத்தாக்கில் வீழ்ந்ததால் விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பெகோ இயந்திரத்தின் சாரதி மற்றும் அந்த இயந்திரத்தின் பின்னால் பயணித்த இருவர் உட்பட மூன்று பேர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர்களில் இயந்திரத்தின் பின்னால் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குன்னேபான பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, பெகோ வாகனத்தின் சாரதியும் இன்னுமொரு நபரும் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி பெற்றோர் ஆர்ப்பாட்டம்

(நோட்டன் பிரிட்ஜ்)

அதிபரை இடமாற்றம் செய்வதற்கு ஹட்டன் வலயக் கல்விப் பணிமனை நடவடிக்கை எடுக்கும் வரை எமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பமாட்டோம் என ஹட்டன் வெலிஓயா மலைமகள் தமிழ் வித்தியாலய மாணவ பெற்றோர் தெரிவிக்கின்றனர்

மாணவர்களின் வருகையின்மையால் நேற்றைய தினம் ஹட்டன், வெலிஓயா மலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் கல்வி நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்திருந்தது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; கடந்தவாரம் தரம் 11இல் கல்வி பயிலும் மாணவனை, அதிபர் கடுமையாக தாக்கிய சம்பவம் தொடர்பில் வித்தியாலயத்தின் அதிபர், தமது பாடசாலைக்கு வரக்கூடாது என வலியுறுத்தியும் அதிபரை இடமாற்றம் செய்து தருமாறு கோரியும் பாடசாலைக்கு முன்பாக பெற்றோர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மாண வனை தாக்கியமை, பாடசாலை அதிபர் செய்த ஊழல்கள் தொடர்பிலும் குறித்த அதிபர் எமக்கு வேண்டாமென கூறியும் மனுவொன்றை ஹட்டன் வலயக் கல்விப் பணிமனைக்கு வழங் கியுள்ளனர்.

எனினும், ஒரு வாரத்திற்கு மேலா கியும் இதுவரை அதிபர் குறித்து ஹட்டன் வலயகல்வி பணிமனையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. அதன் காரணமாகவேதான் எமக்கு ஒரு தீர்வு கிட்டும்வரை தாம் பாடசாலைக்கு மாணவர்களை அனுப்பப்போவதில்லையென தெரிவித்து மாணவர்களை பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பவில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் ஹட்டன் வலயக் கல்விப் பணிமனையின் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரனை பலமுறை தொடர்புகொள்ள முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

## 154 ஆவது தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு மரக்கன்று நடுகையும் சிரமதானப் பணியும்

(மஸ்கெலியா)

154ஆவது தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஹட்டன் எஸ்.பி. அலுவலகத்தின் சமூக காவல்துறை மற்றும் சுற்றுச்சூழல் பிரிவு ஏற்பாடுசெய்திருந்த மரக்கன்றுகள் நடுகை மற்றும் சிரமதானப் பணியும் நேற்றுக் காலை 10.45 மணியளவில் மஸ்கெலியாவிலுள்ள சமன் தேவாலய வளாகத்தில் நடைபெற்றது.

மரம் நடும் நிகழ்வில் ஹட்டன் பிரிவுக்குப் பொறுப்பான எஸ்.எஸ்.பி. விஜித அல்விஸ் மற்றும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி ஐ.எல்.ரத்நாயக்க ஆகியோர் தலைமையேற்றனர்.

இந்நிகழ்வை சமன் தேவாலயத்தில் விசேட பூஜைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு மவுசாக்கலை நீர்தேக்கத்தைச் சூழவுள்ள பகுதியில் இம்மரக்கன்றுகள் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மவுசாக்கலை நீர்மின் நிலைய அதிகாரி, கிராம சேகவர்கள், மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான அதிகாரி மற்றும் பொலிஸாரும் பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டனர்.









# 50,177 பட்டதாரிகள் அரச சேவைக்கு நியமனம்

## அரச சேவையில் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு ஜனாதிபதி தலைமையில்...





சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்டுக்காக வேலை கலாசாரத்தை உருவாக்குவதற்காக 60 ஆயிரம் பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்ளும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு அடையாள ரீதியாக நியமனங்களை வழங்கும் நிகழ்வு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வு 25 நிமிடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட எளிமையான முறையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தாலும் ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் 60 ஆயிரம் பேரை இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைய 50 ஆயிரத்து 177 பட்டதாரிகள் தற்போது அரச சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண் பட்டதாரிகள் 38 ஆயிரத்து 760 பேரும் 31 ஆயிரத்து 172 கலை பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டுள்ளனர். மேலும், இவர்களில் பட்டதாரிகளை வகைப்படுத்தினால் உள்வாரி பட்டதாரிகள் 29 ஆயிரத்து 156 பேரும், வெளிவாரிப் பட்டதாரிகள் 20 ஆயிரத்து 322 பேரும், தேரர்கள் ஆயிரம் பேரும் இந்நியமனங்களை பெற்றுக்கொண்டனர்.

ஏனைய பட்டதாரிகளில் வணிகத்துறை 1,839, முகாமைத்துவம் 7,278, விஞ்ஞானம் 4,494, சுதேச வைத்தியத்துறை 143, இணை சுகாதாரம் 161, கணினி தொழில்நுட்பம் 989, பொறியியலாளர் மற்றும் சட்டம் 233 பேர் உள்ளிட்ட கணக்காய்வு டிப்ளோமாதாரிகள் 1906 பேரும் அடங்குவர்.

நியமனங்களை பெற்றுக்கொண்டவர்கள் தலைமைத்துவம், திறன் மற்றும் எண்ணக்கரு அபிவிருத்திப் பயிற்சிகளுக்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

இவர்களின், ஒரு வருட கால பயிற்சி நிறைவின் பின்னர் கிராமிய மற்றும் தோட்டப் பாடசாலைகள், விவசாய சேவை மத்திய நிலையங்கள், பிரதேச நீர்ப்பாசன அலுவலகங்கள், வனஜீவராசிகள் அலுவலகம், சுதேச ஆயுர்வேத வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், மருந்தகங்கள், சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கை அலுவலகம் போன்ற கிராமிய பிரிவுடன் நேரடியாக தொடர்புள்ள நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,

அபிவிருத்தி செயற்பாட்டுக்கு செயற்றிறனுடன் பங்களிக்கவேண்டும். அரச சேவைக்கு வருமானம் ஈட்டித்தரக்கூடிய விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு சுமையாகாமல் தாம் பெற்றுக்கொள்ளும் ஊதியத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டும். தமது தொழிலில் முன்னோக்கி பயணிக்கக்கூடிய வகையில் பட்டப்பின்படிப்பு, கணினிப் பயிற்சி மற்றும் குறித்த துறைசார் ஏனைய தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவது நியமனம் பெற்றவர்களின் பொறுப்பாகுமென்று குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சர் களான சமல் ராஜபக்ஷ, ஜீ.எல்.பீரிஸ், பந்துல குணவர்தன, ஜனக்க பண்டார தென்னகோன், கெஹெலிய ரம்புக்வெல்ல, டலஸ் அழகப்பெரும, நாமல் ராஜபக்ஷ மற்றும் பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர்கள் சிலரும் அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### நோர்வே தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு:

## பல முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்



இலங்கைக்கான நோர்வே தூதுவர் டீரீன யுரன்லி எஸ்கடேல் (Trine Joranli Eskedal) நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது 9ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவுசெய்யப்பட்டமைக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த துடன், நாடாளுமன்ற இராஜ தந்திரத்தின் முக்கியத்துவம் தொடர்பில் இவர்கள் கலந்துரை யாடியிருந்தனர்.

மேலும், எதிர்காலத்தின் நாடாளுமன்ற அங்கத்தவர்களின் பகிர்வுகள் தொடர்பான பரஸ்பர நிலைப்பாடுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது கலந் துரையாடப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

முன்னர் ஒஸ்லோ நிலையத்தின் நிகழ்ச்சித்திட்டமொன்றின் அடிப்படையில், இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் நோர்வே நாடாளுமன்றத்துக்கு விஜயம்செய்து, வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதி களுடன் சந்திப்புகளை மேற்கொண் டிருந்ததுடன், அதனூடாக கைகோர்த்த செயற்பாடுகளை கட்டியெழுப்புவது தொடர்பில் நோர்வே கொண்டிருக்கும் செயன்முறைகள் பற்றி அறிந்து கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

பல்வேறு நாடுகளிலிருந்து கிடைக்கும் பிரயோக அனுபவங்களினூடாக கற்றுக் கொள்ளும் பாடங்களின் முக்கியத்துவத்தை தூதுவர் வலியுறுத்தியிருந்ததுடன், வெவ்வேறு நாடாளுமன்றங்களில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் கையாளப்படும் விதம் தொடர்பில் அறிந்திருப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இதன்போது தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், தமது நாடாளுமன்ற அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்ட விடயங்களை பகிர்ந்துகொள்வதில் நோர்வே ஆர்வத்துடன் இருப்பதாகவும், பொருளாதார அபிவிருத்தி, கடற்றொழில், நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் மற்றும் இலங்கைக்கும் நோர்வேக்குமிடையே பரஸ்பர உறவுகளைக் கட்டியெழுப்புவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க மற்றும் நோர்வே தூதரகத்தின் பிரதித் தலைமை அதிகாரி ஹில்டே பேர்க்-ஹன்சன் மற்றும் நாடாளுமன்றத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 120 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது!

**மோதர பிரதேசத்தில் 120 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக மத்திய கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். மோதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்சத செவன தொடர்மாடி குடியிருப்பில் கொழும்பு மத்திய பிரிவின் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 44 வயதுடைய ஹேனமுல்ல, கொழும்பு - 15ஐ சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் நேற்று மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். மோதர பொலிஸார் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.**



கடந்த 31ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கலைக் கமால் மியூசிக் நைட் விருதுவழங்கும் வைபவத்தில் ஏ.எல்.எம்.உவைஸ் ஹாஜியார் பஸ்லி ரூமி மையத்தினால் சமூக சேவைக்கான மஸ்னவி ரூமி நினைவு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



**நேற்று முன்தினம் கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மானிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பக் கட்டிடம் மாணவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டபோது.**

## 8,25,000 ரூபா பெறுமதியான தங்கநகைகள் கொள்ளை: சந்தேகநபர் அளவ்வ பிரதேசத்தில் சிக்கினார்

(இக்பால் அலி)

அளவ்வ பிரதேசத்தில் வீடொன்றில் 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை நபரொருவர் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார். நகைகளை கொள்ளையிட்டுச் சென்று தலைமறைவாகியிருந்த நிலையில், சந்தேகநபரை அளவ்வ பிரதேசத்தில் வைத்து கைதுசெய்துள்ளதாக குருநாகல் பொலிஸ் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

அளவ்வ குடுகல பிரதேசத்தில் வீட்டில் தனிமையில் இருந்த பெண்ணொருவர் தம்வீட்டு முற்றத்தை சுத்தம் செய்யும் வேளையில் வீட்டுக்குள் நுழைந்த திருடர் அலுமாரியிலிருந்த வீட்டில் 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான 3 தங்கச் சங்கிலிகள், 3 விரல் மோதிரம், 2 கைக் காப்புகள் ஆகியவற்றை அலுமாரியை உடைத்து திருடிச் சென்ற சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமையவே தலைமறைவாகியிருந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் அளவ்வ குடுகல பிரதேசத்தை வதிவிடமாகக்கொண்டவர். இவர் முக்கியமான குற்றவாளி எனவும் இதற்கு முன்னர் இதுபோன்ற பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு 10 வருடங்கள் சிறையில் இருந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொள்ளையிட்ட தங்க நகைகள் எல்லாம் நகை அடகு வைக்கும் நிறுவனங்களில் விற்பனை செய்துள்ளதாகவும் விசாரணையின்போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## செய்தித் துளிகள்

திஸ்ஸமகாராம, பன்னேகமுவ மற்றும் தெபரவெள பிரதேசத்தில் முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்பின்போது 696 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

★★★★★★★

தரம் 5இல் கல்வி கற்கும் மூன்று மாணவிகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பாடசாலை பாதுகாவலர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★★★★★★★

மகம, நாவின்ன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந் துள்ளனர்.

★★★★★★★

தெற்கு அதிவேக நெடுச்சாலையின் பின்னதுவ வெளியேற்றத்தில் வைத்து தேங்காய்களினுள் மறைத்துவைத்திருந்த நிலையில், 500 கிராம் ஹெரோயினுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய ராசி பலன்கள்

**04.09.2020 (வெள்ளிக்கிழமை)**

**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**


| | | |
|---|---|---|
| மேஷம் | - | தனம் |
| ரிஷபம் | - | இலாபம் |
| மிதுனம் | - | பாராட்டு |
| கடகம் | - | மகிழ்ச்சி |
| சிம்மம் | - | தடங்கல் |
| கன்னி | - | பாசம் |
| துலாம் | - | வெற்றி |
| விருச்சிகம் | - | நிறைவு |
| தனுசு | - | ஓய்வு |
| மகரம் | - | மறதி |
| கும்பம் | - | அசதி |
| மீனம் | - | சாந்தம் |

**சுப நேரம்**
காலை: 06.05 -07.35
காலை: 05.00 - 07.30

**இராகு காலம்**
09.05
10.35

**எம கண்டம்**
03.05
04.45





மறைந்த முன்னாள் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இந்திய தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள ஏட்டில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் கையெழுத்திட்டனர்.



வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேச்சு நடத்தியது இந்திய உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழு. இதன்போது நினைவுச் சின்னங்களும் பரிமாறப்பட்டன.

# மட்டக்களப்பில் சமுர்த்தி வங்கிகள் கணினிமயப்படுத்தப்படுகின்றன

( மட்டக்களப்பு )





சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வரும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் கணினிமயப்படுத்தப்பட்டு துரிதமான சேவையை வழங்கிவருகின்றன.

நாட்டில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக சமுர்த்தி உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக இம் மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 29 சமுர்த்தி சமுதாய அபிவிருத்தி வங்கிகளும், 14 சமுர்த்தி மகாசங்கங்களும் செயற்பட்டு வருகின்றன. இச்சமுர்த்தி வங்கிகளில் கணக்குகளைப் பேணும் பயனாளர்களின் தேவைகளை விரைவுபடுத்தவும், கணக்குகளை மிகச் சரியாக பேணிவருவதற்குமாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் வங்கிச் செயற்பாடுகளும், மகாசங்கங்களின் செயற்பாடுகளும் கணினிமயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் சமுர்த்தி வங்கிகளை கணினிமயப்படுத்தும் முன்னோடித் திட்டம் மட்டக்களப்பு புளியந்தீவு சமுர்த்தி வங்கிக் கிளையில் 2,425 பயனாளிகளுடனும், கல்லடி வங்கிக் கிளையில் 4,760 பயனாளிகளுடனும் 2013 ஆம் ஆண்டுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

இம்முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கப்பெற்றதையடுத்து மாவட்டத்தில் காணப்படும் மாங்கேணி சமுர்த்தி வங்கி 2,197 பயனாளி கணக்குகளுடனும், கல்லாறு சமுர்த்தி வங்கி 6,268 பயனாளி கணக்குகளுடனும், கரவெட்டி சமுர்த்தி வங்கி 1130 பயனாளி கணக்குகளுடனும், பளுகாமம் சமுர்த்தி வங்கி 4,086 பயனாளி கணக்குகளுடனும், ஏறாவூர் கிழக்கு சமுர்த்தி வங்கி 5,558 பயனாளி கணக்குகளுடனும், கோறளைப்பற்று மத்தி சமுர்த்தி வங்கி 11,848 பயனாளி கணக்குகளுடனும், புதிய காத்தான்குடி சமுர்த்தி வங்கி 5,915 பயனாளி கணக்குகளுடனுமாக மேலும் 7 வங்கிகள் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்ட சேவையை வழங்கி வருகின்றன.

மேலும், இம்மாவட்டத்தில் காணப்படும் 20 சமுர்த்தி வங்கிகளும், 14 மகாசங்கங்களும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டு அவற்றுக்கான உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதுதவிர, இத்திட்டத்தை அமுல்படுத்து வதற்காக மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 12 உத்தியோகத்தர்களுக்கு கணினி விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு ஏனைய உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்க சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஏ.பாக்கியராஜா அரசாங்க தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப் பிரிவுக்கு தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் கண்காணிப்பு கெமராக்களை பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

( மட்டக்களப்பு )



மட்டக்களப்பு மாநகரை சுத்தமான மாநகராகப் பராமரிக்கும் வகையில் நடமாடும் கண்காணிப்பு கெமராக்களைப் பொருத்தும் பணிகளை மட்டக்களப்பு மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

மாநகர சபையின் நிர்வாக எல்லைக் குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக வீதியோரங்களில் குப்பைக் கழிவுகள் மற்றும் விலங்குகளின் கழிவுகளை வீசிச் செல்லும் செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக இச்செயற்பாடுகளை தொடரும் நபர்களைக் கண்காணிக்கும் வகை யிலேயே இரகசியமான முறையில் கண் காணிப்பு கெமராக்கள் பொருத்தப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி முதற்கட்டமாக வடிவமைக் கப்பட்ட மேற்படி கெமராக்களை உள்ளடக்கிய தொகுதியை நேற்றுமுன்தினம் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கையளித் தார்.

மட்டக்களப்பு மாநகரை சுத்தமான மாநகரமாகப் பேணும் நோக்கில் 10 சுகாதாரப் பிரிவுகளில் மேற்படி கண்காணிப்பு கெமராக்களை பொருத்தவுள்ளதாகவும் இதனூடாக குப்பைகளை வீதிகளில் வீசிச் செல்லும் நபர்களை அலுவலகத்திலிருந்தே அடையாளங்கண்டு அவர்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மாநகர முதல்வர் இதன்போது தெரிவித்தார்.




# அக்கரைப்பற்றில் நிலக்கடலை மற்றும் பாசிப்பயறு அறுவடை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உப உணவுச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக விவசாயப் போதனாசிரியர் எம்.ஐ.எம். பிறாஸினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அறுவடை விழாவில் நிலக்கடலை மற்றும் பாசிப்பயறு என்பன அறுவடை செய்யப்பட்டதுடன், சிறந்த விவசாய நடவடிக்கைகளை (GAP) மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அக்கரைப்பற்று ஆலிம்நகர் விவசாய விரிவாக்கல் நிலையத்தின் நிலையப் பொறுப்பு விவசாய போதனாசிரியர் ஏ.ஜி. பிர்னாஸ் ஹரீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம்.எவ்.அஹ்மத் சனீர், கௌரவ அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.றாசீக் ஆகியோர் கலந்துகொண்டதுடன், பாட விதான உத்தியோகத்தர் முகம்மத் சியாத், விவசாய வியாபார ஆலோசனைப் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அஹமட் ஜெமீல் மற்றும் விவசாய கண் காணிப்பு உத்தியோகத்தர், விவசாயப் போத னாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## இடைநிறுத்தப்பட்டுள்ள

# சந்தைக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார் ஹாபிஸ் நஸீர் அஹமட் எம்.பி.

(ஏறாவூர்)

இடைநிறுத்தப்பட்டிருந்த ஏறாவூரின் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான விரிவான கலந்துரையாடல் ஒன்று ஏறாவூர் நகர சபையில் இடம்பெற்றது.மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் அகமட் தலைமையில் மாகாண சபை பிரதம செயலாளர்,முதலமைச்சின் செயலாளர்,மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் தொடங்கப்பட்ட பொதுச்சந்தை, கலாசார மண்டபம், சுற்றுலாமையம் ஆகியவற்றின் அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்யும் வகையிலேயே இந்த விரிவான கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டது.





இந்த வருட இறுதிக்குள் பொதுச்சந்தை கட்டிடத்தை நிறைவு செய்து மக்கள் பாவனைக்கு விடுவதாகவும் கலாச்சார மண்டபம், சுற்றுலா மையம் என்பனவற்றை துரிதப்படுத்தி மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட உள்ளதாகவும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது .

# இலங்கையின் சில பிரதேசங்களில் எதிர்வரும் 7ஆம் திகதிவரை சூரியன் உச்சம் கொடுக்கும்

## இடங்களையும் குறிப்பிட்டுள்ளது வளிமண்டலவியல் திணைக்களம்

(அட்டாளைச்சேனை)



வட அரைக்கோளப் பக்கத்திலிருந்து தென் அரைக்கோளப் பக்கமாக சூரியன் மேற்கு நோக்கி நகர்வதன் காரணமாக எதிர்வரும் ஏழாம் திகதி திங்கட்கிழமை வரை இலங்கைக்கு மேலாக சூரியன் உச்சம் கொடுக்கும் - என வளிமண்டலவியல் திணைக் களத்தின் வானிலை அதிகாரி கே.சூரியகுமாரன் தெரிவித்தார்.

சூரியனின் தெற்கு நோக்கிய நகர்வு காரணமாக இலங்கையின் சில பிரதேசங்களில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது. இப்பிரதேசங்களில் அதி உஷ்ணமான காலநிலை காணப்படும். உஷ்ணமான காலநிலைக்கு ஏதுவாக மக்கள் அதிகளவிலான நீராகாரத்தைப் பருகுதல் சிறந்தது.

சூரியன் உச்சம் கொடுக்கும் சில பிரதேசங்களை வளிமண்டலவியல் திணைக்களம் அடையாளப் படுத்தி அப்பிரதேசங்களில் சூரியன் உச்சம் கொடுக்கும் காலப்பகுதியையும் வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக, இன்று வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க, மினுவாங்கொட, டெவலபொல, வாதுராவ, பசியால, நியுடுறுபொல, ஹெகல்வத்த, கம்பொல, கங்குரன்கெத, பிபிலை, கொக்னகர, தம்பட்டை ஆகிய பிரதேசங்களில் நண்பகல் 12.09 மணிக்கு சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

இதேவேளை, நாளை சனிக்கிழமை அங்குலான, கெஸ்வெள, ஈரப்பொல, கிரகல, பொகவந்தலாவ, தியதலாவ, கும்புக்கன, கொடின்ராவ ஆகிய பகுதிகளில் நண்பகல் 12.09 மணிக்கு சூரியன் உச்சம் கொடுக்கும்.

மேலும், நாளை மறுதினம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வென்தொட்ட, மீகம, தொடம்பிட்டிய, பெலவத்த (சப்ரகமுவ மாகாணம்), சூரியஆறு, வொடகம, கதிர்காமம், லிற்றில் வசெஸ் ஆகிய பிரதேசங்களில் நண்பகல் 12.09 மணிக்கு சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஏழாம் திகதி நண்பகல் 12.08 மணிக்கு சூரியன் உச்சம் கொடுக்கவுள்ள சில பிரதேசங்களை வளிமண்டலவியல் திணைக்களம் அடையாளப் படுத்தியுள்ளது. அதற்கமைவாக, கிந்தோட்ட, கல்வெலவத்த, கல்லெல (தென் மாகாணம்), அத்துரெலிய, வைகநெலிய, கஹண்டமோதர ஆகிய பிரதேசங்களில் சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட அதிரடிப்படையின் 36ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு துஆப் பிரார்த்தனை

( அம்பாறை )

பொலிஸ் விசேட அதிரடிப்படை (STF) ஆரம்பிக்கப்பட்டு 36ஆவது ஆண்டு பூர்த்தி நிறைவை முன்னிட்டு அம்பாறை மாவட்டம் மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் ஏற்பாட்டில் நாட்டுக்கும் படைவீரர்களுக்கும் நல்லாசி வேண்டி விசேட துஆப் பிரார்த்தனை நேற்று மாலை இடம்பெற்றது .

இந்நிகழ்வானது மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும் ஆ பள்ளிவாசல் தலைவர் டொக்டர் மௌலவானா தலைமையில் இடம்பெற்றதுடன், மருதமுனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாதிகாரி எம். எச்.அமில மதுரங்க உட்பட அதிரடிப்படை அதிகாரிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், கடந்த யுத்த காலத்தின்போது உயிர்நீத்த விசேட அதிரடிப்படை வீரர்களுக் காகவும் பள்ளிவாசலில் விசேட பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மருதமுனை ஜம்மியதுல் உலமா மற்றும் அனைத்து பள்ளிவாசல்களின் சம்மேளனத்தின் செயலாளர் எம்.எல். எம்.ஜமால்தீன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சர்மில் ஜஹான் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர்கள், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை 14ஆம் திகதி ஆரம்பம்

## கலாசாலையின் அதிபர் பரமேஸ்வரன் தெரிவிப்பு

(அட்டாளைச்சேனை)

நாடளாவிய ரீதியிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்சியை பெற்றுக்கொள்ளும் வகையில் இவ்வாண்டுக்காக விண்ணப்பித்த ஆசிரியர் பயிற்சியாளர்களை கலாசாலைகளுக்கு உள்வாங்கும் நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இதற்கமைவாக, அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாரி பயிற்சி ஆசிரியர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகின்றது - என இக்கலாசாலையின் அதிபர் பி.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இதுவரைகாலமும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரியர் பயிற்சியாளர்களை இணைத்துக்கொள்ளும் நேர்முகப்பரீட்சைகள் கல்வி அமைச்சின் மூலம் கல்வி அமைச்சிலேயே இடம்பெற்றுவந்தன. இருந்தபோதிலும், இவ்வாறான நேர்முகப்பரீட்சைகளை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் நடத்துவதற்கான அனுமதியை, கல்வி அமைச்சின் ஆசிரியர் பயிற்சிக்கான நிர்வாகம் முதற் தடவையாக ஆசிரியர் கலாசாலைகளுக்கு வழங்கியுள்ளது.

அட்டாளைச்சேனை ஆசிரி யர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இஸ்லாம், இரண்டாம் மொழி தமிழ் மொழி உடற்கல்வி ஆகிய பாடநெறி களில் பயிற்சியை தொடர்பவர் களுக்கென எதிர்வரும் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.



இம்முறை அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 235 பயிற்சி ஆசிரியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். இதற்கமைவாக ஆரம்பக்கல்வி பாடநெறிக்கு 186 பேரும், ஆங்கிலப் பாடநெறிக்கு 21 பேரும், இஸ்லாம் பாடநெறிக்கு 11 பேரும், உடற்கல்வி பாடநெறிக்கு 10 பேரும், இரண்டாம் மொழி தமிழ் பாடநெறிக்கு 5 பேரும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடநெறிக்கு இருவரும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், இஸ்லாம், இரண்டாம் மொழி தமிழ் ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் பி.ப 4.30 மணிவரையும், ஆரம்பக் கல்வி பாடநெறிக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 முதல் பி.ப 4.30 வரை இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விபரங்களை அறிந்துகொள்வதற்கு கலாசாலையின் 0672277234 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் - என்றார்.








காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் 13 ஆவது வெளியீடான கவிஞர் இல்மி அஹமட்லெப்பை எழுதிய 'உடையாத ஏணி' கவிதை நூல் வெளியீட்டு விழா, கழகத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கவிமாமணி ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் காத்தான்குடி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது முதலாவது பிரதியை மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினியிடம் நூலாசிரியர் கையளிப்பதையும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.நவநீதன், தொழிலதிபர்களான தேசபந்து ஏ.எல்.எம்.மீராசாஹிபு , கே.எம்.எம்.கலீல், நூலாசிரியர் இல்மி அஹமட்லெப்பை, கவிமாமணி ஜவ்பர்கான் உட்பட அதிதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்- மட்டக்களப்பு)



# சிக்கலற்ற காணிகளுக்கு மூன்று மாத காலத்திற்குள் உறுதிப்பத்திரங்கள்!



## - ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை

- ★ காணிக் கொள்கை சீர்திருத்தப்படும்.
- ★ காணி அபிவிருத்தியின் பின்னர் வேறு ஒருவருக்கு கைமாற்ற முடியாது.
- ★ பயன்படுத்தப்படாத காணி சீர்திருத்த ஆணைக்குழு காணிகளை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை.
- ★ இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கு காணிகள்.

மக்கள் பயன்படுத்தி வருகின்ற சிக்கலற்ற காணிகளுக்கு மூன்று மாத காலத்திற்குள் காணி உறுதிப்பத்திரங்களை வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பல்வேறு மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டபோது காணி உறுதிப்பத்திரம் இல்லாமையே மக்கள் முன் வைத்த மிக முக்கிய பிரச்சினை என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பரம்பரையாக வாழ்ந்து வந்தாலும், பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் உறுதிப்பத்திரம் இல்லாமையினால் அவர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு உட்பட்டிருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாட்டுக்கும் பொருளாதார கொள்கைக்கும் பொருத்தமான வகையில் அமைந்த காணி கொள்கை மறுசீரமைக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

காணி உறுதிப்பத்திரம் இல்லாமையினால் மக்கள் பாரிய சிக்கல்களுக்கு உட்பட்டுள்ளதுடன், அபிவிருத்தியும் பாரிய பின்னடைவு கண்டுள்ளது. விவசாய பொருளாதார பொறிமுறை ஒன்றை கட்டியெழுப்பும்போது காணி பயன்பாட்டுக் கொள்கை மிக முக்கியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளை அபிவிருத்திசெய்ததன் பின்னர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அல்லது காணி உரித்துடைய நிறுவனம் அல்லது வேறு தரப்பினருக்கு பொறுப்பளித்தல் ஆகியன விவசாயிகள் முகங்கொடுத்துள்ள மேலும் ஒரு சிக்கலாகும். அவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாமென்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்துடைய பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படாத காணிகளை பொருத்தமான பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இளைஞர் தொழில் முயற்சியாளர்களுக்கு அவற்றை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் குறிப்பிட்டார்.



பல்வேறு அரசாங்கங்களின் கீழ் ஜனாதிபதிகள் மக்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கினார்கள். ஆனாலும், பிற்பட்ட காலங்களில் வங்கிக்கடன் அல்லது பொருளாதார அலகாக அக்காணிகளை ஆக்கிக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்து வருவதாக பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு காணிகளை வழங்கும்போது கடன் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும். எதிர்காலத்தில் அவ்வாறே மக்களுக்கும் அதுபோன்ற வசதிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உறுதிப்பத்திரங்களை தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

குத்தகை அடிப்படையில் காணி ஒன்றின் சிக்கலற்ற தன்மையை உறுதிசெய்துகொள்வதற்கு 20இற்கும் அதிகமான நிறுவனங்களில் மக்கள் அனுமதி பெறவேண்டும். அதற்காக பல வருடங்கள் செல்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்காது இலகுவான நிபந்தனைகளின் கீழ் காணிகளின் உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

அனுமதிக்காக அரச நிறுவனம் ஒன்றுக்கு முன்வைக்கப்படும் வேண்டுகோளுக்கு 14 நாட்களுக்குள் பதிலளிக்க அவசியமான பின்புலத்தை அரச பொறிமுறையினுள் உருவாக்க வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரனசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# கட்டுக்கடங்காத பராமரிப்புச்செலவு; திரையரங்குகள் மூடப்படும் அபாயம்

திரைப்படம் பார்ப்பதற்கு வருகை தரும் ரசிகர்களுக்கேற்ப, செலவிடப்படும் தொகை அதிகம் என்பதனால் அனைத்து திரையரங்குகளையும் மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக திரையரங்கு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கொவிட் பிரச்சினை காரணமாக நிர்க்கதிக்குள்ளாகியுள்ள தமக்கு இதுவரை எந்தவித நிவாரண உதவிகளும் கிடைக்கவில்லை என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைக்கு மத்தியில் திரையரங்குகளை திறப்பதற்கு திரையரங்கு உரிமையாளர்கள் எடுத்த தீர்மானம் சிறந்தது என தேசிய திரையரங்கு உரிமையாளர் சங்கத்தின் தலைவர் நிமல் குலரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 119 வரையான திரையரங்குகள் இருப்பதாகவும், அவர்களில் 82 உரிமையாளர்கள் வரை தமது சங்கத்தில் உறுப்புரிமையை கொண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் வீழ்ச்சியடைந்திருந்த இலங்கையின் சினிமாத்துறையை கட்டியெழுப்ப ஆரம்பித்த பின்னணியிலேயே, கொவிட் வைரஸ் பிரச்சினை ஏற்பட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

இவ்வாறான பின்னணியில், நகரங்களுக்கு வெளியிலுள்ள திரையரங்குகள் இதுவரை திறக்கப்படவில்லை என அவர் குறிப்பிடுகின்றார்.

தமது சங்கத்திற்கு சொந்தமான கொழும்பிலுள்ள இரண்டு திரையரங்குகள் மிகவும் நஷ்டத்தில் இயங்கி வருவதாகவும், அதில் ஒரு திரையரங்கிற்கு மாத்திரம் ஒன்றரை இலட்சம் ரூபாவிற்கு அதிகம் நஷ்டம் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.



# மஞ்சள்–மிளகுக்கு நிலையான விலை வழங்கப்பட வேண்டும்

## - ஜனாதிபதி தெரிவிப்பு

**★நாட்டிற்கு அவசியமான சோளத்தை உள்நாட்டில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை.**



மஞ்சள் மற்றும் மிளகுக்கு நிலையான விலை ஒன்றை வழங்கி பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாக்க வேண்டுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மஞ்சள் மற்றும் மிளகு பயிர்ச் செய்கையாளர்களை பாதுகாப்பதற்காக அவற்றை இறக்குமதி செய்வது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியாக சந்தை வாய்ப்புக்களை கண்டறிந்து ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம் உயர் விலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக நேற்று (03) பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

மஞ்சள் மற்றும் மிளகு தேவையை உள்நாட்டு பயிர்ச் செய்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளாக ஏற்றுமதி செய்வதற்கும் முறையான திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

நாட்டின் வருடாந்த சோளத்திற்கான கேள்வி 05 இலட்சம் மெற்றிக் தொன்களாகும். அதனை நிறைவு செய்துகொள்வதற்கு பயிரிடப்பட வேண்டிய நிலத்தின் அளவு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ஹெக்ரேயர்களாகும். தற்போது 80 ஆயிரம் ஹெக்ரேயரில் சோளம் பயிரிடப்படுவதோடு, அடுத்த வருட இறுதியில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ஹெக்ரேயர்களில் பயிரிடுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

100 கிராமங்களில் மஞ்சள் மற்றும் இஞ்சியை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, குருந்துகஹ, ஹெதெம்ம பிரதேசத்தில் ஏற்றுமதி வலயம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மிளகாய் பயன்பாட்டிற்கு பதிலாக மக்கள் மத்தியில் மிளகு பயன்பாட்டை அதிகரிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டு வெற்றிலை பிரதானமாக பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. கொவிட் நோய்த் தொற்று காரணமாக விமானப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடி அதற்கான தீர்வை கண்டறியுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

பல்கலைக்கழகங்கள் மூலம் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் அவை சார்ந்த பெறுமதி சேர்க்கப்படும் உற்பத்திகள் தொடர்பான ஆய்வுகளை விரிவுபடுத்துவதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கரும்பு கைத்தொழில் மற்றும் மரமுந்திரிகை பயிர்ச் செய்கையை மேம்படுத்தல் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அமைச்சர் ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர ஆகியோருடன் அமைச்சு, இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்கள், துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பயிர்ச் செய்கையாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் 133 பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன





(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று பிரதேச பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்நியமனங்கள் நாடளாவிய ரீதியாக வழங்கப்பட்டுவருவதுடன், இதன்பிரகாரம் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட 133 பட்டதாரிகளுக்கு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஸ்ஸான் தலைமையில் நியமனக்கடிதங்கள் வழங்கிவைக்கும் நிகழ்வு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட பிரதேச செயலாளர் நியமனக்கடிதங்களை வழங்கி பட்டதாரிகளுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்ததுடன், வருகை தராத பெயர்ப்பட்டியலிலுள்ள ஏனைய பட்டதாரிகள் தாமதியாது பிரதேச செயலகத்திற்கு வருகை தந்து நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் ஏ.கே.றொசின்தாஜ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.தமீம், கணக்காளர் எஸ்.எல்.சர்த்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.பாறூக், நிர்வாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சீனக்குடா பொலிஸ் பிரிவில் முள்ளம்பன்றி தாக்கி குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

**( கந்தளாய் )**

**சீனக்குடா பொலிஸ் பிரிவில் விமானப்படை தல சுற்று வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவரை முள்ளம்பன்றி ஒன்று தாக்கியதில் படுகாயமடைந்த நபர் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**இவ் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஏ.எல்.நிலாம் என்பவரே இவ்வாறு முள்ளம்பன்றி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.**

**இவர் திருகோணமலை பிறிமா ஆலையில் கடமையாற்றிவிட்டு வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தபோதே முள்ளம்பன்றி ஒன்று இவரை தாக்கியுள்ளது. அந்த வழியால் சிறியரக லொறி ஒன்றில் வந்தவர்கள் இவரை அதில் ஏற்றி கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதித்து விட்டுச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.**

**இப்பிரதேசத்தில் காட்டு விலங்குகள் வீதியைக் கடந்து செல்வதால் அதிகமான விபத்துகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

## அக்கரைப்பற்றில் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டமாவடியில் கைப்பற்றப்பட்டது



(அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலமாக இரவு நேரங்களில் இடம்பெற்றுவரும் திருட்டுச் சம்பவங்களினால் பல இலட்சக்கணக்கான பணம், தங்க நகைகள் மற்றும் வாகனங்கள் களவாடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அதனடிப்படையில், கடந்த ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் அக்கரைப்பற்றில் விலை கூடிய மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டிருந்தது.

எனவே மேற்படி களவாடப்பட்ட மோட்டார் சைக்கிளை கண்டுபிடிப்பதற்கான முயற்சியில் அம்பாறை மாவட்ட குற்றப் புலன் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் கே.எம்.ஏ.கே.பண்டாரவின் தலைமையிலான பொலிஸ் குழுவொன்று அதிரடியாக இயலில் இறங்கியதன் விளைவாக குறித்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஓட்டமாவடி பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை அம்பாறை மாவட்ட குற்றப்புலன் விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர் .




## பயிற்றுவிக்கப்பட்ட பயிலுனர்களுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு



( பொத்துவில்)

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கைத் தொழில் மற்றும் வணிக அமைச்சராக இருந்தபோது, அவ்வமைச்சின் ஊடாக ஆரம்பித்து வைக்கப்பட்ட "மினிகாமன்ட்" செயற்றிட்டத்தின் மூலமாக பயிற்று விக்கப்பட்ட பயிலுனர்களுக்கான தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பொத்துவில் பிரதேச செயலகத்தில், பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளரினால் இந்தச் செயற்றிட்டம் பற்றிய தெளிவுரை வழங்கப்பட்டது.

பயிற்சியை நிறைவுசெய்த பயிலுனர்களுக்கான தையல் இயந்திரங்களை கையளித்து, அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தக்கூடிய பேண்தகு அபிவிருத்திகள் தொடர்பாக பயிலுனர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## வாழைச்சேனை நீதிமன்றத்திற்கு முன்னாலுள்ள பஸ்தரிப்பிடத்தின் அவலநிலை



(ஓட்டமாவடி)

வாழைச்சேனை - கொழும்பு பிரதான நெடுஞ்சாலையில் வாழைச்சேனை நீதிமன்றத்துக்கு முன்னாலுள்ள பஸ் தரிப்பிடம் முழுமையாக சேதமடைந்து காணப்படுவதால் இந்த இடத்தில் தரித்துநின்று பஸ்ஸுக்காக காத்துநிற்கும் பயணிகளும், அரச ஊழியர்களும் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த பஸ் தரிப்பிடமானது வாழைச்சேனை நீதிமன்றத்திற்கு முன்னால் காணப்படுவதோடு, அருகில் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களமும், வாழைச்சேனை புகையிரத நிலையமும், கமத்தொழில் பிரதேச அலுவலகமும், வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதேச காரியாலயமும், பொலிஸ் நிலையமும் காணப்படுவதால் அரச சேவையில் பணிபுரியும் ஊழியர்கள் தங்கள் பணி முடிந்து பஸ்ஸுக்கு காத்துநிற்க முடியாத அவலநிலை தொடர்வதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மழையுடன்கூடிய காலநிலை கிழக்கில் தொடர்வதனால் அரச ஊழியர்களும், தொழில் நிமித்தம் வெளியூர்களிலிருந்து வருகை தரும் பயணிகளும் இந்த இடத்தில் நிற்க முடியாத அசௌகரியத்தை சந்தித்து வருகின்றனர்.

## பாண்டிருப்பு உப தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் அமைக்க கோரிக்கை



(பாண்டிருப்பு)

பாண்டிருப்பு உப தபால் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடமொன்றை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்குமாறு தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடக, தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனிடம் பாண்டிருப்பு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த 48 வருடங்களுக்கு மேலாக பாண்டிருப்பில் உப தபால் நிலையம் ஒன்று இயங்கிவருகின்றது. இத் தபால் நிலையம் 1972ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை தனியார் காணிகளிலும், தனியார் கட்டிடங்களிலும் மாறிமாறி அதன் சேவையை வழங்கிவருகின்றது.

போதியவசதிகளற்ற நிலையிலும், ஆவணங்களைப் பாதுகாப்பதற்கு களஞ்சிய அறைகூட இல்லாதுள்ளது. அத்துடன், இங்கு மாதாந்த உதவித் தொகையைப் பெற வருகின்ற முதியோர்கள் ஆறுதலாக அமர்ந்து தமது உதவித் தொகையைப் பெறமுடியாது வீதியின் ஓரத்தில் காத்திருக்கவேண்டியுள்ளது. அந்தளவுக்கு தளபாட வசதிகள் எதுவுமற்ற நிலையிலேயே பாண்டிருப்பு உப தபால் நிலையம் காட்சியளிக்கின்றது.

எனவே, இக் கிராமத்திலுள்ள 2,600 குடும்பங்களுக்கும் சிறந்த தபால் சேவையை வழங்கிவரும் பாண்டிருப்பு உப தபால் நிலையத்திற்கு சகல வசதிகளும் கொண்ட தபால் நிலையமொன்றை அமைக்க தபால் சேவைகள் அமைச்சு ஊடாக நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் இராஜாங்க அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுனர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

( பாண்டிருப்பு )

போரதீவுப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் புதிதாக பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான அலுவலக நடைமுறைகள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி தலைமையில் நேற்று நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச செயலகப்பரிவில் 147 பேர் பட்டதாரி பயிலுனர்களாக நியமனம் பெற்றுள்ளனர். குறித்த பட்டதாரி பயிலுனர்களுக்கு நிர்வாக நடைமுறைகள் தொடர்பிலும், ஆளுமைமிக்க தலைமைத்துவம் தொடர்பிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. முறையான பயிற்சிகள் வழங்கப்படும் பட்டதாரி பயிலுனர்கள் பின்னர் பல்வேறு அரச சேவை பிரிவுகளுக்குள் உள்வாங்கப்படவுள்ளனர். இன்றைய கருத்தரங்கில் போரதீவுப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.புவனேந்திரன், கணக்காளர், பிரதேச இராணுவ அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அட்டாளைச்சேனையில் கல்வி அபிவிருத்திக் கூட்டம்

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக் கூட்டம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில் தலைமையில் நேற்று அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.எல்.எம். காசீம் கலந்துகொண்டு கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு விளக்கங்களை இங்கு முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டமாவடி கோட்டப் பாடசாலைகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் விஜயம்



(மீராவோடை)

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட ஓட்டமாவடி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு மட்டக்களப்பு மத்தி கல்வி வலயப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம்.எஸ்.உமர் மௌலானா நேற்று வியாழக் கிழமை விஜயமொன்றை மேற் கொண்டிருந்தார்.


இதன்போது குறித்த கோட்டத்திலுள்ள வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம், ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், சரீப் அலி வித்தியாலயம், பிறைந்துறைச்சேனை அஸ்ஹர் வித்தியாலயம், சாதுலியா வித்தியாலயம், மீராவோடை அல் ஹிதாயா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களை அவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

குறித்த பாடசாலைகளில் கட்டப்படும் புதிய கட்டிடங்களை துரிதப்படுத்திக் கொடுக்குமாறு ஒப்பந்தக்காரர்களிடம் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

அத்தோடு, பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை அதிபர்களுடன் கேட்டறிந்ததுடன், கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

குறித்த விஜயத்தின்போது பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.யோகானந்த கிரி ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டிலிருந்த தாயிடமும் மகளிடமும் தங்கச் சங்கிலிகள் கொள்ளை



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அமிர்தகழி சுக்குறு ஒழுங்கையில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் தாயும் மகளும் தங்களின் வீட்டில் இருந்தபோது திடீரென வீட்டுக்குள் நுழைந்த நான்கு நபர்கள் தாயினதும் மகளினதும் கழுத்தில் கத்தியை வைத்து அவர்கள் அணிந்திருக்கும் தங்கச் சங்கிலியை தராவிட்டால் கழுத்தை அறுத்துவிடுவதாக மிரட்டியதையடுத்து பீதியடைந்த தாயும் மகளும் தாங்களாகவே மாலையை கழற்றிக் கொடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது;

அமிர்தகழி சுக்குறு ஒழுங்கையில் அமைந்துள்ள வீட்டிலேயே மேற்படி கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர்களின் வீட்டுக்கு எதிரே கைவிடப்பட்ட நிலையில் பாழடைந்த ஒரு வீடு உள்ளது. அங்கிருந்துகொண்டு சிலர் போதைப்பொருட்கள் பாவனை மற்றும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வந்தமை சில நாட்களாக அவதானிக்கப்பட்டிருந்தது.

இவர்களால்தான் இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது . சம்பவம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த பாழடைந்த வீட்டில் மது அருந்திய நிலையில் ஒருவர் மட்டக்களப்பு பொலிஸாரினால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், மேலும் சில சந்தேக நபர்கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன .

# சீத்துவக்கேடு 65



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

உன்னைப்போல பனையைத் தறிக்க வேணும் எண்டு சொல்லுறவையை பனையில கட்டி வைச்சு பச்சை மட்டையால வெளுக்க வேணும் கண்டியோ. பனை இருக்கிறபடியாலதான் உங்க கன இடங்களிலை தண்ணிப் பஞ்சம் இல்லைக் கண்டியோ. பனைவேர் அகலமாப் போகாமல் ஆழமா நேராப் போறதால மண்ணை இறுக்கிப் பிடிக்கிறதால தண்ணியையும் இறுக்கி பிடிச்சு வைச்சிருக்கும்.

அதாலதான் அந்தக் காலத்தில இருந்த எங்கட ராசாமார் குளக்கரையள் ஏரிக் கரையள் வாய்க்கால்கள் மற்ற தண்ணி நிலையள் எண்டு எல்லாத்துக்கும் கிட்ட நிறைய பனை மரங்களை நட்டு வைச்சவை. உந்த பனையின்ரை தண்ணியைப் பிடிக்கிற குணத்தாலதான் வயல் ஓரங்களிலை – கடக்கரை ஓரங்களிலை எல்லாம் நிறையப் பனையள் வைச்சவை கண்டியோ எண்டுவார் அப்பு.

பனையின்ரை வேர்கள் மூண்டு விதமா அமைஞ்சு இருக்கெண்டு படிச்ச ஆக்கள் சொல்லுகினம். வெளிப்புறமா இருக்கிற வேர் அமைப்பு மழை நீரை வேகமாக உள்ளுக்கு கொண்டுபோகும். உள்ளுக்கு இருக்கிற வேர் அமைப்பு மழை நீரை சேமிச்சு வைக்கும்.

நடுமையத்தில இருக்கிற வேர் அமைப்பு உள்ள இருக்கிற நீரை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் உச்சிக்கு அனுப்பி வைக்கிறது. அதால கனக்க நீர் தேவைப்படாது. இதாலதான் பனையால நீரை பிடிச்சு வைக்கக்கூடியதா இருக்கு எண்டு உவை சொல்லுகினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

அதுவும் அதுகின்ரை முக்கியமான வேர் கிட்டத்தட்ட நூறு நூற்றைம்பது அடி ஆழம் வரை போகுமெண்டால் பனையள் எத்தினை அடி ஆழத்துக்கு நீரை பிடிச்சு வைச்சிருக்கும் எண்டு கொஞ்சம் யோசிச்சுப் பார் பாப்பம் எண்டுவார். அதோட மண்ணை இறுக்கிப் பிடிச்சிருக்கிறதால மண் அரிப்பையும் எல்லோ பனை நல்லாத் தடக்கும்.

தடக்கும் எண்ட உடனதான் எனக்கு ஞாபகம் வருகுது. பனை நல்ல வேகமா அள்ளுகொள்ளையா வாற தண்ணியை அணை மாதிரி நிண்டு தடக்குமாம். அதால பனையை அணைமரம் எண்டும் சொல்லுறவையாம் கண்டியோ எண்டுவார். உதுமட்டுமில்லை, பனை மரங்களை நெருக்கமாக நட்டு உயிர்வேலி ஒண்டு எழுப்பிவிட்டால் யானை கூட உள்ளுக்கு ஊருக்கை வரேலாது எண்ட விசயம் கனபேருக்குத் தெரியாது கண்டியோ.

யானை காணியுக்க வருகுது, அழிக்குது எண்ட ஆக்கள் பேசாம தங்கட காணி எல்லையில நல்லா பனைமரங்களை நெருக்கமா நட்டுவைச்சினம் எண்டால் யானை உள்ளுக்கை வரவே ஏலாது விளங்கிச்சா எண்டுவார்.

உந்தப் பனையின்ரை உறுப்புகள் எண்டு சொல்லுறதோடு, மடல், ஓலை, எடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலைகளின்ரை விபரம் தொல்காப்பியத்தில

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலை என நேர்தான பிறவும்
புல்லோடு வரும் எனச் சொல்லினர் புலவர்
(தொல்காப்பியம் மரபியல் 88) எண்ட

பாட்டிலை வருகுது. உதிலை எங்களுக்கு மிகவும் முக்கியமான சாமான் ஓலை. உந்த ஓலை பற்றி கன பழைய பாட்டுகளிலை கிடக்கு கண்டியோ. அவ்வளவுக்கு ஓலை முக்கியம். உந்த ஓலையிலை இருந்துதான் எங்கட பழைய ஆக்கள் ஏட்டுச்சுவடியள் செய்தவை.

எங்கட ஆக்கள் நாட்டுப்பனையோலை, சீதாளப்பனையோலை எண்டு ரெண்டு விதமான ஓலையளை எழுதப் பாவிச்சவையாம். இண்டைக்கு நாங்கள் பேப்பரிலை என்ன என்ன விசயங்கள் எல்லாம் எழுதிறமோ அவ்வளவு விசயங்களையும் அவை எங்கட பழைய ஆக்கள் முந்தி ஓலையிலதான் எழுதினவையாம். அரச கட்டளைகள், இலக்கியங்கள், இலக்கணங்கள், அறிவியல் விசயங்கள், மருத்துவம், சாதகங்கள், கடிதங்கள், முக்கியமான ஆவணங்கள் எல்லாம் அவை உந்த ஓலைகளிலைதான் எழுதினவை.

உப்பிடி எழுதின ஓலையள எங்கட ஆக்கள் ரெண்டாப் பிரிச்சவை. ஒண்டு மூல ஓலை. உதை அடி ஓலை எண்டும் அதுதான் ஒரிஜினல் ஓலை மற்றது படியோலை உதை அச்சோலை எண்டும் சொல்லுறது வழக்கம் . கொப்பி பண்ணுறது மாதிரி மூல ஓலையைப் பாத்துதான் உந்த அச்சோலை எழுதுவினம் கண்டியோ. “மூலவோலை மாட்சியிற் காட்ட”, “மூட்சியிற் கிழித்த வோலை படியோலை” எண்டு பெரியபுராணத்தில தடுத்தாற்கொண்ட புராணத்தில உந்த ஓலைக் கதையை சேக்கிழார் நல்ல வடிவாச் சொல்லுறார் கண்டியோ எண்டுவார்.

உதை மாதிரி அந்த நாளையில கல்வெட்டுகளிலை செப்பெடுகளிலை விசயங்களை எழுதேக்கை எழுத்துப் பிழை இல்லாமல் எழுதவேணும் எண்டதுக்காக முதலிலை ஒலையளில எழுதிப் பாப்பினமாம் அப்பிடி எழுதி எல்லாரும் பாத்தா பிறகுதான் கல்வெட்டில இல்லாட்டில் செப்பேட்டில எழுதுவினமாம் எண்ட செய்திகள் பழைய ஓலைச்சுவடிகளிலை “கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளும்” எண்டு இருக்கு கண்டியோ எண்டுவார்.

உந்த ஓலை சம்பந்தமான விசயங்கள் “ஒட்டித்தான் விடுத்த ஓலை உட்பொருள் உரைமின் என்ன” (சீவக. 2143),”ஓலையுட் பொருளைக் கேட்டே” (சீவக. 2148), “கணக்குத்துறை முற்றிய கடுஞ்சொல் ஓலை அரக்குப்பொறி யொற்றி யானையிற் போக்கி” (பெருங். 1:37:208–209), “துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை” (கலி.94:42), “மண்ணுடை முடங்கன் மாதவி யீத்தலும்” (சிலப்.13:76),

“கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்துநாள் ஓலைவிட்டார்” (தடுத்தாட்கொண்ட புராணம்,9), “பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன் போக்கி” (திருஞானசம்பந்தர் புராணம், 1169), “தோகைமண வோலைகொடு தூதுவ ரடைந்தார்”(நடைதம், நளன்தூது, 3), “மாதவி யோலை மலர்க்கை னீட்ட” (சிலப்.13:82), “வேண்டிற் றெல்லாங் குறைவின்றித் தரநாம் ஓலை தருகின்றோம்” (கழறிற்றறிவார் புராணம், 27), “தேவர்கோன் எழுதும் ஓலை” (கழறிற்றறிவார் புராணம், 52) எண்டு நிறையக் கிடக்கு கண்டியோ எண்டுவார்.

**(தொடரும் )**

# பிளய்டனை போன்று மீண்டுமொரு கறுப்பின இளைஞன் படுகொலை

## கதறியபடி நீதி கேட்கும் பலியானவர் குடும்பம்!

அமெரிக்காவில் கறுப்பினர்மீது காவல்துறையினர் கொடூரமாக தாக்கி வருவதாக தொடர்ந்து முறைப்பாடுகள் எழுந்த நிலையில், நியூயோர்க் நகர காவல்துறையினரால் கறுப்பின இளைஞரொருவர் கொடூரமாக கொல்லப்பட்ட வீடியோவை அந்த இளைஞரின் குடும்பத்தினர் வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் அமெரிக்காவின் மினியாபோலிஸ் நகரில் கறுப்பினத்தைச் சேர்ந்த 46 வயதான ஜோர்ஜ் பிளாய்ட் என்பவர் பொலிஸ் அதிகாரியால் கழுத்தில் மிதித்துக் கொல்லப்பட்டார். இதை எதிர்த்து கடந்த 3 மாதங்களுக்கு மேலாக அமெரிக்கா முழுவதும் பல்வேறு போராட்டங்களும், வன்முறைச் சம்பவங்களும் நடந்துவருகின்றன.

இந்நிலையில், நியூயோர்க் நகரத்தில் கடந்த மார்ச் 23ஆம் திகதி கறுப்பின இளைஞரான டேனியல் ப்ரூட் என்பவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனளிக்காமல் மார்ச் 30ஆம் திகதி அவர் உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் வரை டேனியல் ப்ரூட்டின் இறப்பு பெரியதாக பேசப்படவில்லை. இந்நிலையில், டெனியல் ப்ரூட்டின் குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் நியூயோர்க்கில் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது, ஒரு அதிர்ச்சிகரமான வீடியோவை வெளியிட்டனர். அதில், பொலிஸார் சுற்றி நிற்க டேனியல் ப்ரூட் வீதியில் நிர்வாண நிலையில் இருக்கிறார். அவரின் கை பின்னால் கட்டப்பட்டு கைவிலங்கு போடப்பட்டுள்ளது. பொலிஸார் ஒருவர் **spit hood** என்று சொல்லப்படும் பிளாஸ்ரிக் பை போன்ற பொருளால் டேனியலின் முகத்தை மூடுவது போன்ற காட்சிகள் அதில் இருந்தன.

கொரோனா பரவல் காரணமாக தங்கள் மீது டேனியல் ப்ரூட் எச்சில் உமிழ்ந்துவிடக் கூடாது என்பதற்காக பொலிஸார் ஸ்பிட் கூட்டை வைத்து அவரின் முகத்தை மூடியதாக சொல்லப்படுகிறது. தன் முகத்தில் மூடப்பட்ட ஸ்பிட்கூட்டை அகற்ற டேனியல் ப்ரூட் போராடியதால், ஆத்திரமடைந்த பொலிஸார் அவரின் முகத்தை பிடித்து வீதியில் அடித்ததில் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவத்தால் ப்ரூட்டின் உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.






டேனியல் ப்ரூட் சற்று மனநிலை பாதித்தவர் என்று சொல்லப்படுகிறது. சிக்காகோலிருந்து தன் சகோதரர் ஜோ ப்ரூட் வீட்டுக்கு அவர் வந்துள்ளார். அப்போது, திடீரென்று வீட்டிலிருந்து டேனியல் ப்ரூட் காணாமல் போய்விட்டார். இதையடுத்து, ஜோ ப்ரூட் அவசர எண் 911– ஐ அழைத்து தன் சகோதரர் காணாமல் போனமை குறித்தும் சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் தகவல் கூறியுள்ளார். இதையடுத்து, பொலிஸார் அவரை தேடியபோது, நியூயோர்க் நகரின் மேற்கு பகுதியிலுள்ள ரோசஸ்டர் என்ற இடத்தில் காவல்துறையினரிடத்தில் டேனியல் ப்ரூட் பிடிபட்டுள்ளார்.

அப்போதுதான், மனநிலை பாதித்தவர் என்று சற்றும் யோசிக்காமல் காவல்துறையினர் இந்தக் கொடூரத்தை நிகழ்த்தியுள்ளனர். டேனியல் ப்ரூட்டின் மரணம் மூச்சுத்திணறல் காரணமாக நிகழ்ந்துள்ளதாக உடற்கூறு ஆய்விலும்சொல்லப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து நியூயோர்க் மாநகர அட்டர்னி ஜெனரல் லெதிதா ஜேம்ஸ் விசாரணை நடத்தி வருகிறார். டேனியல் ப்ரூட்டின் மரணம் குறித்த வீடியோ காட்சிகள் வெளியிடப்பட்டதால் அமெரிக்காவில் கறுப்பின மக்களின் போராட்டம் மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# திங்களன்று நல்ல செய்தி வரும்





பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்ரமணியத்தின் உடல்நிலை 4ஆவது நாளாக சீராகவுள்ளது என அவரது மகன் சரண் தகவல் தெரிவித்துள்ளார். “இந்த வார இறுதி அல்லது திங்கட்கிழமைக்குள் நல்ல செய்தி வரும் என நான் காத்திருக்கிறேன். அனைவரினதும் பிரார்த்தனைக்கும் பலன் கிடைத்துள்ளது” என எஸ்.பி.சரண் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் உடல்நிலை சீராக முன்னேற்றம் அடைந்துவருகிறது. வென்டிலேட்டர் மற்றும் எக்மோ கருவிகள் உதவியுடன் எஸ்.பி.பி.க்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. பல்நோக்கு மருத்துவர் குழு எஸ்.பி.பி.யின் உடல்நிலையை கண்காணித்துவருகிறது. சுயநினைவோடு இருக்கும் எஸ்.பி.பி. மருத்துவ சிகிச்சைக்கு தொடர்ந்து ஒத்துழைக்கிறார் என தனியார் மருத்துவமனை நிர்வாகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

# நவல்னியை கொல்ல சதி: ஜேர்மன் அதிபர் அதிரடி

## ரஷ்ய அரசு விளக்கமளிக்க வேண்டும்: அமெ. - ஐ.நா. - பிரித்தானியா வலியுறுத்து



ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவல்னி உடல்நிலை சீர்குலைந்ததற்கு மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கும் விஷம் வைத்து கொலைசெய்ய நடைபெற்ற முயற்சியே காரணம் – என ஜேர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல் தெரிவித்துள்ளார்.

அலெக்சிக்கு ஜேர்மனியின் பெர்லின் நகரிலுள்ள **Charite** மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அந்த மருத்துவமனையின் வேண்டுகோளின்பேரில், இராணுவ ஆய்வகத்தில் நடத்தப்பட்ட பரிசோதனையில், நோவிசோக் எனப்படும மத்திய நரம்பு மண்டலத்தை தாக்கும் நச்சுப்பொருளை பயன்படுத்தி, நவல்னியை கொலைசெய்ய முயற்சி நடைபெற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாக ஜேர்மன்அதிபரின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு ரஷ்ய அரசு விளக்கம் அளிக்கவேண்டும் என ஜேர்மன், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் உள்ளிட்டோர் வலியுறுத்தியுள்ளனர்.

உலகச் செய்திகள்

# நவ. 3இல் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்: ஒரு நாளுக்கு முன் கொரோனா தடுப்பூசி



ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு நாள் முன்னதாக கொரோனா தடுப்பூசியை வெளியிட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகெங்கும் இரண்டரை கோடிக்கும் மேலானோரைப் பாதித்துள்ள கொரோனா வைரஸால், 8 இலட்சத்துக்கும் மேல் உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. இதனால், வைரஸை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் 150இற்கும் மேற்பட்ட நாடுகள் ஈடுபட்டுள்ளன. தடுப்பூசி கண்டுபிடிப்பது, அதற்கு உலக சுகாதார அமைப்பின் அனுமதியை பெறுவது, சர்வதேச அளவில் ஒருங்கிணைந்து விநியோகம் செய்வது என்று கூட்டுத் திட்டமிடலாக இந்த முயற்சி நடந்துவருகிறது.

இதற்கிடையில், உலகில் கொரோனாவால் அதிகம் பாதிப்புக்குள்ளாகி, இலட்சக்கணக்கில் உயிழப்புகளை சந்தித்த நாடு அமெரிக்காவில எதிர்வரும் நவம்பர் 3ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சி சார்பில் டெனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிட, ஜனநாயக கட்சி வேட்பாளராக ஜோ பிடன் களமிறங்குகிறார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் கொரோனா தாக்கம் முக்கிய பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக கொரரோனாவுக்கு தடுப்பூசி வெளிவந்துவிட்டால், டொனால்ட் டிரம்ப் வெற்றிபெற வாய்ப்பு அதிகம் என்று சொல்லப்படுகிறது. எனவே, தேர்தல் நாளுக்கு முன்னதாக கொரோனா தடுப்பு மருந்தை வெளிக்கொண்டுவருவதில் டொனால்ட் ட்ரம்ப் அதிக ஆர்வங்காட்டி வருகிறார்.

சமீபத்தில் தேர்தல் பிரசாரத்தில் பேசிய அவர், தேர்தலுக்கு முன்னதாக தடுப்பு மருந்து விநியோகிக்கப்படும் என்றும் கூறினார். இந்நிலையில், அமெரிக்க நோய் தொற்று தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை தடுப்பு மையத்தின் இயக்குனர் ரொபர்ட் டெல்ஃபீல்ட் கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி , அமெரிக்க மாகாண ஆளுநர்களுக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார். அதில், எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் கொரோனாவுக்கு தடுப்பூசி வெளியிடப்படும். எனவே, அனைத்து சுகாதார மையங்கள் மற்றும் மருத்துவமனைகளை தயார் நிலையில் வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இதனால், அமெரிக்காவில் தேர்தல் வெற்றியை கவனத்திற்கொண்டு அவசர கதியில் கொரோனா தடுப்பூசியை அறிமுகப்படுத்துவதாக டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



# நெய்மருக்கு கொரோனா

பிரேஸில் காற்பந்து அணியின் முன்னணி வீரரும், பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியின் நட்சத்திர வீரருமான நெய்மர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

நட்சத்திர வீரரான நெய்மர் பிரான்ஸ் நாட்டில் தற்சமயம் நடைபெற்றுவரும் காற்பந்து லீக் தொடரில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியில் விளையாடி வருகிறார். இந்நிலையில், குறித்த தொடரில் பங்கேற்கும் மூன்று வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி தெரிவித்துள்ளது. இதில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான வீரர்களின் பெயர்களை பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி வெளியிடவில்லை. இருந்தாலும், நெய்மர் டி மரியா, லயாண்ட்ரோ பரேடஸ் ஆகிய வீரர்களே இவ்வாறு கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நெய்மர் விடுமுறையை கொண்டாட இபிஸா தீவுக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போதே நெய்மருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யு.ஈ.எவ்.ஏ. சம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி, தற்போது பிரெஞ்ச் லீக்கில் அவர்களுடைய 2ஆவது போட்டியை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டது. அதன்படி ஓகஸ்ட் 29ஆம் திகதி நடைபெறவிருந்த போட்டி ஒக்டோபர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# சென்னை அணியில் மீண்டும் ரெய்னா

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உப தலைவரும் முன்னணி துடுப்பாட்ட வீரருமான சுரேஷ் ரெய்னா இந்தியன் பிரிமியர் லீக் தொடரிலிருந்து விலகுவதாக கூறி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து நாடு திரும்பியமை கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இந்தியாவிலுள்ள சுரேஷ் ரெய்னாவின் மாமனார் இனந்தெரியாத நபர்களினால் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்ததைத் தொடர்ந்து சுரேஷ் ரெய்னா நாடு திரும்பியதாக ஆரம்பத்தில் செய்தி வெளியாகியது. பின்னர் டோனிக்கும் - ரெய்னாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்ததன் காரணமாகவே ரெய்னா தொடரிலிருந்து விலகி நாடு திரும்பினார் என கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் தகவல் வெளியாகின.

குறித்த சம்பவம் தொடர்பில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளரான சீனிவாசன் ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது சுரேஷ் ரெய்னாவின் மீதான தனது கோபத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் சுரேஷ் ரெய்னா கருத்து வெளியிட்டுள்ளார். “டோனியுடன் எந்த மோதலும் இல்லை. அணி உரிமையாளர் சீனிவாசன் கூறியதை தந்தை திட்டியதுபோல் உணர்கிறேன். தன்னை கூடிய விரைவில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் பார்க்கலாம். நான் பயிற்சி செய்துகொண்டிருக்கிறேன்'' எனவும் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

# FFSL தலைவர் கிண்ணத்தை சுவீகரித்த கொழும்பு காற்பந்து கழகம்




இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் மிக பிரமாண்டமான முறையில் நடைபெற்ற எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் கிண்ண காற்பந்து தொடரின் சம்பியனாக கொழும்பு காற்பந்து கழகம் தெரிவானது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மாபெரும் இறுதிப்போட்டியில் கொழும்பு காற்பந்து கழகத்தை எதிர்த்து ப்ளூ ஈகில்ஸ் (விமானப்படை) விளையாட்டுக் கழகம் மோதியது. விறுவிறுப்பாக ஆரம்பமான குறித்த இறுதிப்போட்டியில் 31ஆவது நிமிடத்தில் கொழும்பு காற்பந்து கழகம் சார்பாக அஹமட் சஸ்னி முதல் கோலை அடித்தார்.

இதனுடன் முதல் பாதி முடிவில் கொழும்பு காற்பந்து கழகம் 1-0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றது. பின்னர் ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தின் 68ஆவது நிமிடத்தில் கொழும்பு கழகம் சார்பாக மொமாஸ் யாபோ கோலடித்தார். பதிலுக்கு ப்ளூ ஈகில்ஸ் கோலடிக்க போராடியது. ஆனால், எதிரணி வீரர்கள் மிகவும் சவாலாக விளங்கினார்கள்.

இந்நிலையில், போட்டியின் 82ஆவது நிமிடத்தில் கொழும்பு கழகத்திற்காக முதல் கோலடித்த அஹமட் சஸ்னி, மீண்டுமொரு கோலடிக்க அணியின் கோல் எண்ணிக்கை 3 ஆக உயர்வடைந்தது. இதனை தொடர்ந்து ப்ளூ ஈகில்ஸ் கழகத்தின் வெற்றிவாய்ப்பு மங்கிப்போனது.

இவ்வேளையில் போட்டியின் இறுதி 90ஆவது நிமிடத்தில் சபீர் ரசுனியா கோலடிக்க கொழும்பு காற்பந்து கழகம் 4-0 என்ற கோல்கள் கணக்கில் ப்ளூ ஈகில்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் சம்பியன் கிண்ணத்தை வென்றது. இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக கொழும்பு காற்பந்து கழகத்தின் மொஹமட் பசால் தெரிவானதுடன், தொடரின் சிறந்த வீரராக ப்ளூ ஈகில்ஸ் விளையாட்டுக் கழகத்தின் கவிந்து இஷான் தெரிவானார்.







# தொடர்ந்தும் இருப்பை தக்கவைத்த பாபர் அஸாம்

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடர் நிறைவுக்கு வந்ததைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் பேரவை யானது புதிய இருபதுக்கு இருபது தரவரிசையை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இருபதுக்கு இருபது துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் முதலிடத்திலிருந்த பாகிஸ்தான் இருபதுக்கு இருபது அணியின் தலைவர் பாபர் அஸாம் இரண்டு இன்னிங்ஸ்களில் ஒரு அரைச்சதத்துடன் 77 ஓட்டங்களை குவித்ததன் அடிப்படையில் 869 தரவரிசை புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் தனது இருப்பை தக்கவைத்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் அரைச்சதத்துடன் 87 ஓட்டங்களை குவித்த டேவிட் மாலன் 771 தரவரிசை புள்ளிகளுடன் முதல் ஐந்திற்குள் புகுந்துள்ளார். இங்கிலாந்து அணி சார்பாக தொடரில் அதிக ஓட்டங்களாக 137 ஓட்டங்களை குவித்த டொம் பென்டன், 490 தரவரிசை புள்ளிகளுடன் 152 நிலைகள் உயர்ந்து 43ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

மேலும், தொடரில் பாகிஸ்தான் அணிக்கு துடுப்பாட்டத்தில் தூணாக விளங்கிய தொடர் நாயகன் மற்றும் இறுதிப் போட்டி நாயகன் விருதுகளை வென்ற மொஹமட் ஹபீஸ் 24 நிலைகள் முன்னேறி 44ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதேவேளை, தொடரில் பந்துவீச்சில் அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சதாப் கான் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் ஒரு நிலை உயர்ந்து 651 புள்ளிகளுடன் எட்டாமிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

# அம்பாறை மாவட்ட மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டி; அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது

(றியாஸ் இஸ்மாயில்)

வரிப்பத்தான்சேனை சலாமா இளைஞர் கழகம் நடத்திய அம்பாறை மாவட்ட மின்னொளிக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவானது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 64 முன்னணிக் கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் வரிப்பத்தான்சேனை அஷ்ரப் பொது விளையாட்டு மைதானத்தில் கழகத்தின் முகாமையாளர் எஸ்.சனூன் தலைமையில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் இறக்காமம் அல்-றாசி விளையாட்டுக் கழகம் - அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்டது. நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற அல்-றாசி விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாட நியூ ஸ்டார் அணியினரை கேட்டுக்கொண்டதற்கமைவாக, நியூ ஸ்டார் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் சிபான் 17 பந்துகளுக்கு 51 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

102 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அல்-றாசி அணியினர், நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகளை இழந்து 46 ஓட்டங்களை மாத்திரம் பெற்று போட்டியில் 55 ஓட்டங்களால் தோல்வியை தழுவிக்கொண்டனர். அல்-றாசி அணியின் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக றஜா 23 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

இறுதிப்போட்டியில் சிறந்த வீரராக நியூ ஸ்டார் அணியின் சிபானும், சிறந்த பந்துவீச்சாளராக நியூ ஸ்டார் அணியின் சாக்கீரும், தொடரின் சிறந்த வீரராக சலாமா அணியின் முகம்மட் சாகீரும் தெரிவுசெய்யப்பட்டு அதிதிகளால் கிண்ணம் வழங்கப்பட்டது.

இச்சுற்றுப்போட்டியில் வெற்றிபெற்று சம்பியனான நியூ ஸ்டார் அணிக்கு வெற்றிக் கிண்ணமும், 40 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும் வழங்கப்பட்டது. இறுதிப்போட்டியில் தோல்வியடைந்த அல்-றாசி கழகத்திற்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், இறக்காமம் பிரதேச சபையின் உறுப்பினர் என்.எம்.ஆசீக், தேசிய காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் வீ.ரீ.சமூன், அக்கரைப்பற்று மக்கள் வங்கி முகாமையாளர் எம்.பீ.எம்.அன்வர், இறக்காமம் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் யு.எல்.றசீன் உட்பட அனுசரணையாளர்கள், உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.











Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7